தமிழ்நாடு ● மகளிர் மேம்பாட்டு ●

முற்றம்

₹ 5/- மலர் 12 இதழ் 11 மார்ச் 2011

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

கலைநயமிக்க
கைவினைப் பொருட்கள்

> கந்து வட்டிக்காரர்களின் பிடியில் இருந்து கிராமப்புற மகளிரைக் காக்கும் வகையில் வங்கிகள் மூலம் எளிய முறையில் கிராமப்புற மகளிருக்கு கடன் பெற்றுத் தர தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

டாக்டர். K. கோபால், இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்.

ஏழை எளிய மகளிர் பொருளாதார ரீதியாக சுய சார்பு பெற்றிடவும், அவர்கள் அனைத்து மட்டங்களிலும் அதிகாரம் பெறவும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் அமைப்பானது இன்று மகளிருக்கு மிகவும் உதவிகரமாக உள்ளது.

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் அனைத்து மாவட்டங்களிலும் மகளிர் திட்ட செயலாக்க அலகுகள் செயல்பட்டு வருகின்றன.

இவைகளின் மூலம் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு பல்வேறு நிர்வாக மற்றும் தொழிற்பயிற்சிகள் வழங்கப்பட்டு, பயிற்சிக்கு ஏற்ற வேலைவாய்ப்புகளும், வங்கிக் கடன் வழங்குவதன் மூலம் சுய தொழில் மேற்கொள்ளவும் ஊக்குவிக்கப்படுகிறது.

இளைஞர்களுக்கு தொழிற்பயிற்சிகள் வழங்கி, தனியார் நிறுவனங்களில் பணி வாய்ப்புகள் பெற்றுத் தரப்படுகின்றன. சுய உதவிக் குழுக்களின் செயல்பாட்டினை நிலைப்படுத்தும் வகையில் குழுக்களை இணைத்து கூட்டமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. கூட்டமைப்புகளை வலுப்படுத்திடும் வகையில் மறுசீரமைக்கப்பட்டு வருகின்றன.

மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்திட ஏதுவாக பூமாலை வணிக வளாகங்கள் கட்டப்பட்டுள்ளன. கிராம அங்காடிகளும் கட்டப்பட்டு வருகின்றன. சென்னையில் அன்னை தெரசா மகளிர் வளாகம் அமைக்கப்பட்டுள்ளது.

மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களின் விற்பனையை மேம்படுத்தும் வகையில் ஆண்டுதோறும் நவராத்திரி, கிறிஸ்துமஸ், புத்தாண்டு பொங்கல் ஆகிய விழாக் காலங்களில் விற்பனைக் கண்காட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

கந்து வட்டிக்காரரர்களின் பிடியில் இருந்து கிராமப்புற மகளிரைக் காக்கும் வகையில் வங்கிகள் மூலம் எளிய முறையில் கிராமப்புற மகளிருக்கு கடன் பெற்றுத் தர தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எனவே மகளிர் சுய உதவிக் குழுக்களில் உறுப்பினர்களாக உள்ளவர்கள் மகளிர் திட்டத்தின் செயல்பாடுகளுக்கு உறுதுணையாக இருந்து செயல்பட்டு முன்னேற்றம் பெற வாழ்த்துகிறேன்.

அனைவருக்கும் மகளிர் தின நல்வாழ்த்துகள்!

மேலாண்மை இயக்குநர்

உள்ளே...

கடிதங்கள் – 3

மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்திப் பொருட்களின் விற்பனைக் கண்காட்சி குறித்த வண்ணப்படங்கள் சென்ற இதழில் அருமையாக இருந்தன.

வெற்றிக் கதை – 4

அனைத்து விதமான ஆடைகளும் குறிப்பாக பெண்களுக்கான சுடிதார், பிளவுஸ், நைட்டீஸ் மற்றும் குழந்தைகளுக்கான அனைத்து வகையான ஆடைகளும் தயாரிக்கப்பட்டு வருகிறது.

அட்டைப்படக் கட்டுரை – 6

மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பல்வேறு கலைப்பொருட்களின் படங்களும், அப்பொருட்கள் கிடைக்கும் இடங்களும், மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கங்களின் முகவரி மற்றும் தொலைபேசி எண்கள் இடம் பெறுள்ளன

மகளிர் தின சிறப்பு – 16

நூற்றாண்டு காணும்
மகளிர் தினம் (1911 - 2011)

மாவட்டச் செய்திகள் – 14

குழுக்கள் மற்றும் கூட்டமைப்புகளின் செயல்பாடுகள், சுழல் நிதி, பெருங்கடன், மணிமேகலை விருது, குழுக்களின் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்துதல் தொடர்பான விபரங்கள் குறித்து இக்கூட்டத்தில் ஆய்வு மேற் கொள்ளப்பட்டது.

சுய உதவிக் குழுக்கள் தொடர் – 20

விடாமுயற்சி இருந்தது. ஒரு சிறு ஆதரவை வைத்துக் கொண்டு அதையே இலட்சியமாக வைத்துக் கொண்டு கடுமையாக உழைத்து முன்னேறி அதன் முழுப் பயனையும் பெற்று செல்வந்தராகி வாழ்க்கையில் ஒரு பெரிய சாதனையையே நிகழ்த்திக் காட்டி விட்டான்.

நம் நாட்டில் பன்னாட்டு மகளிர் தினம் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. மகளிர் தினத்தன்று பல்வேறு கொண்டாட்டங்கள் நடைபெறுகின்றன. நவீன உலகில் மகளிர் சக்தியையும், சமூகத்தில் அவர்களது முக்கியப் பங்கையும் மகளிர் தினத்தின் மூலமாக வெளிப்படுத்தப்படுகிறது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு

முற்றம்

மலர் 12 இதழ் 11 மார்ச் 2011 விலை ரூ. 5/-

கௌரவ ஆசிரியர்
டாக்டர். K. கோபால், இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்
தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்

ஆசிரியர்
திரு. எஸ். சின்னப்பன்
செயலர், முற்றம்

நிர்வாக ஆசிரியர்
திருமதி. எப். இன்னசென்ட் திவ்யா
பொது மேலாளர்

ஆசிரியர் குழு
திருமதி. ஆர். வி. ஷஜீவனா
கூடுதல் திட்ட இயக்குநர்
வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

திருமதி. மாலதி ஹெலன்
தகவல் தொடர்பு வல்லுநர்
வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

பொறுப்பாசிரியர்
திரு. வெ. இராமமூர்த்தி
மக்கள் தொடர்பு அலுவலர்

அனுப்புகை உதவியாளர் - முற்றம்
திரு. ஏ. கண்ணன்

கணக்கர்
திருமதி. சு. சசிகலா

கணினி வடிவமைப்பு
திரு. மு. செல்வம்

பிழை திருத்துபவர்
திரு. எஸ். எஸ். ரவிச்சந்திரன்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :
ஆசிரியர், 'முற்றம்'
தபால் பெட்டி எண். 3226
100, அண்ணா சாலை, கிண்டி,
சென்னை - 600 032.
தொலைபேசி: 044-42085804/05/06
தொலைநகல்: 044-4202 7635,
044-2235 2751

www.tamilnaduwomen.org/mutram
wdcmutram@yahoo.com
wdcmutram@gmail.com

முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது

ஆசிரியரிடமிருந்து

மகளிர் தினம்!

அன்புள்ள வாசகர்களுக்கு,

வீட்டில் முடங்கிக் கிடந்த பெண்களை வெளி உலகத்தை பார்க்க வைத்ததில் பெரும் பங்கு மகளிர் சுய உதவிக் குழுக்களையே சாரும். இன்று தமிழகத்தில் மட்டும் ஏறத்தாழ ஐந்து லட்சம் மகளிர் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றில் பல இலட்சக்கணக்கான பெண்கள் உறுப்பினர்களாக தங்களை இணைத்துக் கொண்டு செயல்பட்டு வருகின்றனர்.

இந்தக் குழுக்களில் இணைந்து பல்வேறு பயிற்சிகளைப் பெற்று விழிப்புணர்வு அடைந்து, பல்வேறு வளர்ச்சிப் பணிகளை செய்து வருகின்றனர் என்பது பாராட்டத் தக்கது.

மகளிர் குழுக்கள் உருவான காலம் முதல் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதம் 8ஆம் நாள் அகில உலக மகளிர் தினத்தை சிறப்பாகக் கொண்டாடி வருகின்றனர்.

உலகின் மக்கள் தொகையில் பெண்கள் சரிபாதி இருந்தும் ஆண்களுக்கு நிகராக பெண்களுக்கு நீதி கிடைக்கவில்லை என்பதை பெண்கள் சரியாகவே புரிந்து கொண்டு விட்டனர். இதன் விளைவாகத்தான் இன்று பெண்கள் பல்வேறு துறைகளில் தனித்துவம் பெற்று மிகத் திறமையுடன் செயல்பட்டு வருகின்றனர்.

இருப்பினும் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக பெண்களை மன ரீதியாகவும், வெளிப்படையாகவும் அடிமைபடுத்தப்பட்டு வந்ததால் பெண்களின் மன நிலையில் மாற்றம் ஏற்படுத்துவது மிகவும் கடினமான பணியாகவே உள்ளது.

இதனால் பெண்கள் ஆண்களை சார்ந்தே வாழ வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கி நிற்கிறது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண் தலைவர்கள் கூட சுயமாக இயங்க முடியாத நிலையில் இந்த ஆண் ஆதிக்க சமுதாயம் தடுத்து வருகிறது.

பெண்கள் தின விழாவில் இதுபோன்ற விழிப்புணர்வு கருத்துக்களை பகிர்ந்து கொள்வது அவசியமாகிறது. பெண்கள் அனைவரும் ஒற்றுமையாக இணைந்து தங்களின் உரிமைகளை பெற்றுக் கொள்ள வேண்டும் என மகளிர் தின விழாவில் உறுதி எடுப்போம். பெண்களுக்கு எதிரான அநீதிகளை எதிர்த்து குரல் கொடுக்க வேண்டும். மகளிர் அமைப்புகள் வலுவாகவும், சிறப்பாகவும் செயல்பட்டால் மட்டுமே இவைகளை சாதிக்க முடியும்.

எனவே, மகளிர் தினத்தில் அனைத்து பெண்களும் ஆண்களுக்கு நிகராக உரிமை பெற்று வளர்ச்சி அடைய வேண்டும் என முற்றம் தனது வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறது.

இப்படிக்கு

(எஸ். சின்னப்பன்)
முற்றம் ஆசிரியர்

www.tamilnaduwomen.org/mutram

பாரிஜாத மலர்!

முற்றம் என்னும் மலரில் அழகாய் இதழ்களை இணைத்து, அறியாமையை அகற்றி அத்துடன் சில நல்ல கருத்துக்களையும், பல நல்ல செய்திகளையும் இணைத்து அழகான ஒரு மலர் மாலை போல் அனைவரும் எதிர்பார்க்கும் வண்ணம் மாதந்தோறும் வெளிவரும் பாரிஜாத மலர் போன்ற முற்றம் இதழை எங்களுக்கு தரும் ஆசிரியர் குழுவிற்கு எங்களின் நன்றி.

இப்படிக்கு,
திருமதி. வெண்ணிலா (ஊக்குநர்)
செம்பருத்தி மகளிர் சுய உதவிக் குழு,
மெய்க்காவல் புத்தூர், அரியலூர்.

வாழ்க! வளர்க!!

அடிமைப்பட்டுக் கிடந்த பெண்கள் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படுத்திட வந்த மகளிர் சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகளை மாதந்தோறும் சுவைபடத் தருவதுடன், வரலாற்றில் மகளிர் என்ற தலைப்பில் வெளிவரும் கட்டுரைகளும் மிகவும் அருமை. மகளிர் அறிந்திட மாதந்தோறும் பல செய்திகளையும் தாங்கி வரும் முற்றம் இதழே நீ வளமுடன் வாழ்க! மேலும் மேலும் வளர்க!!

அன்புடன்,
திருமதி. சித்ரா இராமதாஸ்
நட்சத்திரம் மகளிர் சுய உதவிக் குழு,
ஒசூர் நகரம்,
கிருஷ்ணகிரி.

வண்ணப்படங்கள் அருமை!

மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்திப் பொருட்களின் விற்பனைக் கண்காட்சி குறித்த வண்ணப்படங்கள் சென்ற இதழில் அருமையாக இருந்தன. மருத்துவக் குறிப்பு, சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகள், வாழ்ந்த காட்டுவோம் திட்டத்தின் வறுமை ஒழிப்பு சங்கத்தின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் போன்றவை மிகவும் அருமையாக இருந்தன. முற்றம் இதழிற்கு நன்றி!

என்றும் அன்புடன்,
திருமதி. திலகம் ஜெகந்நாதன்,
மல்லிகை மகளிர் குழு,
திருவையாறு, தஞ்சை மாவட்டம்.

மகளிர் முன்னேற்றத்திற்கு உறுதுணையாய் இருக்கும் முற்றம் இதழிற்கு சந்தா செலுத்தி உறுப்பினர்களாகி முற்றம் இதழ் மேலும் மேலும் சிறப்பாய் வளர வாழ்த்துங்கள்!

கவிதை, உடல் நலக் குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள், தங்கள் பகுதியில் நடைபெறும் சுய உதவிக் குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவற்றை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். மேலும் சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகள், குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும்.

– ஆசிரியர், முற்றம்

மின்னஞ்சல் : wdcmutram@yahoo.com wdcmutram@gmail.com

வெற்றிக் கதை

அழகிய ஆடைகளை உருவாக்கும்

இந்திராகாந்தி மகளிர் சுய உதவிக் குழு

குழு துவக்கப்பட்டு ஆறுமாத காலம் நிறைவுற்றபின் முதல் தர மதிப்பீட்டில் தேர்ச்சிப் பெற்று பொன் விழா கிராம சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் சுழல் நிதியாக ரூ. 25,000/– பெற்று சிறு தொழில் செய்து வருமானம் ஈட்டி வந்தனர்.

திருவள்ளூர் மாவட்டம், புழல் வட்டாரம், கதிர்வேடு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் கீழ் செயல்படும் இந்திரா காந்தி மகளிர் சுய உதவிக் குழுவானது மிகவும் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த பெண்களை உறுப்பினர்களாக் கொண்டு கடந்த 2002ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இக்குழுவின் உறுப்பினர்களுக்கு மகளிர் திட்டம் மூலம் அடிப்படை பயிற்சிகளும், நிர்வாகப் பயிற்சிகளும் வழங்கப்பட்டது.

குழு உறுப்பினர்கள் தங்கள் சேமிப்பின் மூலம் கிடைத்த தொகையினை உள்கடனாகப் பெற்று தங்களின் அத்தியாவசியத் தேவைகளுக்குப் பயன்படுத்திக் கொண்டனர். மகளிர் திட்டத்தின் மூலம் தொழில் முனைவோர் பயிற்சி வழங்கும் திட்டத்தின் கீழ் குழுவில் உறுப்பினர்களாக உள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் தொழிற்பயிற்சியாகத் தையல் பயிற்சி அளிக்கப்பட்டது.

பின்னர் மானியத்துடன் கூடிய பொருளாதாரக் கடனாக ரூ. 2,50,000/– பெறப்பட்டு, அத்தொகையில் தையல் இயந்திரங்கள் வாங்கப்பட்டு, தையல் தொழிலினை குழுவின் உறுப்பினர்கள் மேற்கொள்ளத் துவங்கினர்.

குழுவின் உறுப்பினர்கள் ஊக்கத்துடன் இத்தொழிலில் ஈடுபட்டனர். பின்னர் வங்கியின் மூலம் ரூ. ஐந்து இலட்சம் நேரடிக் கடன் பெறப்பட்டு இத்தொழிலை விரிவாக்கம் செய்துள்ளனர்.

அனைத்து விதமான ஆடைகளும் குறிப்பாக பெண்களுக்கான சுடிதார், பிளவுஸ், நைட்டீஸ் மற்றும் குழந்தைகளுக்கான அனைத்து வகையான ஆடைகளும் தயாரிக்கப்பட்டு வருகிறது.

தற்போது அனைத்து விதமான ஆடைகளும் குறிப்பாக பெண்களுக்கான சுடிதார், பிளவுஸ், நைட்டீஸ் மற்றும் குழந்தைகளுக்கான அனைத்து வகையான ஆடைகளும் தயாரிக்கப்பட்டு வருகிறது.

இதன் மூலம் கிடைக்கும் வருவாயில் வங்கிக் கடன் செலுத்தியது போக உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் மாதம்தோறும் தலா ரூ. 3000/– முதல் ரூ. 4000/– வரை வருமானம் பெற்று வருகின்றனர்.

வீடுகளில் எவ்வித வருவாயும் இல்லாது இருந்த பெண்கள் சுய உதவிக் குழுவினைத் தொடங்கி, அதன்மூலம் தொழிற்பயிற்சிகள் பெற்று, சுய தொழிலினை மேற்கொண்டு அதன் மூலம் தங்களது குடும்பப் பொருளாதார முன்னேற்றத்தையும், குழந்தைகளின் கல்வி மற்றும் எதிர்காலத்தையும் தீர்மானிக்க முடியும் என்ற நம்பிக்கையோடு செயல்பட்டு வருகின்றனர். ■

ஐம்பொன் நகைகளை தயாரிக்கும்

ஸ்ரீ சொர்ண லலிதாம்பிகை மகளிர் சுய உதவிக் குழு

ஊனமுற்றோர், முதியோர், ஆதரவற்றோர் மற்றும் கர்ப்பிணிகளுக்கு உதவுதல், எய்ட்ஸ் விழிப்புணர்வு முகாம் நடத்துதல், சுகாதார கழிப்பிடம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்ச்சிகளை நடத்துதல், பெண்கள், குழந்தைகள் மற்றும் முதியோர்களுக்கு தேவையான உதவிகள் செய்தல் போன்ற நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

மங்கையர் மனம் விரும்பும் வண்ணம் பல்வேறு வகையான வடிவங்களில் ஐம்பொன் நகைகளை உற்பத்தி செய்து வருகின்றனர் கோவை மாவட்டம், ஆர்.எஸ்.புரத்தில் செயல்பட்டு வரும் ஸ்ரீ சொர்ண லலிதாம்பிகை மகளிர் சுய உதவிக் குழுவினர். கோவை மாவட்ட மகளிர் திட்ட செயலாக்க அலகின் மூலம் இக்குழுவின் உறுப்பினர்கள் நிர்வாகப் பயிற்சிகளையும், ஐம்பொன் நகைகள் தயாரித்தல் குறித்த பயிற்சிகளையும் பெற்றுள்ளனர்.

சுழல் நிதி, பொருளாதாரக் கடன், நேரடிக் கடன் போன்றவற்றை பெற்றுள்ளதுடன், அத்தொகையினைக் கொண்டு ஐம்பொன் நகைகள் தயாரிப்பதற்கு தேவையான கருவிகள், மூலப் பொருட்கள் போன்றவற்றை வாங்கி தற்போது நகைகளை தயாரித்து விற்பனை செய்து வருவாய் ஈட்டி வருகின்றனர். வங்கியில் பெற்றக் கடனையும் தவணை தவறாமல் செலுத்துவதுடன், மாதந்தோறும் கணிசமான தொகையினையும் வருவாயாக குழுவின் உறுப்பினர்கள் பெறுகின்றனர்.

வட்டார, மாவட்ட, மாநில மற்றும் வெளிமாநிலங்களில் அளவில் நடைபெறும் விற்பனைக் கண்காட்சிகளில் அரங்குகள் அமைத்து தங்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்து வருவதுடன், மலைவாழ் மக்களுக்கு நகை தயாரிப்பது குறித்த பயிற்சிகளை அளிப்பது, ஆதிவாசி மகளிர் குழுக்களுக்கு அடிப்படை பயிற்சிகள் அளிப்பது போன்ற செயல்களிலும் இக்குழுவினர் ஈடுபட்டு வருகின்றனர். கோவை மாவட்டத்தில் உள்ள நலிந்த நகை தொழிலாளர்களின் சார்பாக மாவட்ட ஆட்சியரை சந்தித்து, நகை தொழிலாளர்களின் மறுவாழ்விற்கு தேவையான உதவிகளை பெற்றுத் தந்துள்ளனர்.

ஊனமுற்றோர், முதியோர், ஆதரவற்றோர் மற்றும் கர்ப்பிணிகளுக்கு உதவுதல், எய்ட்ஸ் விழிப்புணர்வு முகாம் நடத்துதல், சுகாதார கழிப்பிடம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்ச்சிகளை நடத்துதல், பெண்கள், குழந்தைகள் மற்றும் முதியோர்களுக்கு தேவையான உதவிகள் செய்தல் போன்ற நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். ஸ்ரீ சொர்ண லலிதாம்பிகை மகளிர் சுய உதவிக் குழுவின் சிறப்பான சேவைகளை அப்பகுதி மக்கள் அனைவரும் பாராட்டுகின்றனர் என்றால் அது மிகையாகாது. ■

நகைகளை தயாரித்து விற்பனை செய்து வருவாய் ஈட்டி வருகின்றனர். வங்கியில் பெற்றக் கடனையும் தவணை தவறாமல் செலுத்துவதுடன், மாதந்தோறும் கணிசமான தொகையினையும் குழுவின் உறுப்பினர்கள் வருவாயாக பெறுகின்றனர்.

மூங்கில் பொருட்கள்

விலை : ரூ. 100
முதல் ரூ. 600 வரை

கிடைக்கும் மாவட்டங்கள்

நாகப்பட்டினம்
வேலூர்
கிருஷ்ணகிரி

பனை ஓலைப் பொருட்கள்

விலை : ரூ. 20 முதல் ரூ. 250 வரை

கிடைக்கும் மாவட்டங்கள்

கன்னியாகுமரி, இராமநாதபுரம்
சிவகங்கை, நாகப்பட்டினம், வேலூர்.

க லை ந ய மி க் க
கைவினைப் பொருட்கள்

மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை சந்தைப்படுத்துவதற்கு தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் சிறப்பு முன்னுரிமை அளித்து பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களின் விற்பனையினை அதிகப்படுத்தவும், மக்களிடையே இப்பொருட்களை பிரபலப்படுத்தவும் மாநில, மாவட்ட மற்றும் வட்டார அளவில் சிறப்பு விற்பனை கண்காட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. ஆண்டுதோறும் மாநில அளவில் 2 விற்பனை கண்காட்சிகளும் மாவட்ட அளவில் 62 திட்டமிட்ட கண்காட்சிகளும் இது தவிர 134 விருப்ப கண்காட்சிகளும் நடத்தப்படுகின்றன. மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரித்த பெருட்களை விற்பனை செய்வதற்காக மாவட்ட அளவில் 29 வணிக வளாகங்கள், 22 கூடுதல் வணிக வளாகங்கள் மற்றும் 256 கிராம அங்காடி வளாகங்களும் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

சுய உதவிக் குழுக்களால் தயாரிக்கப்படும் பொருட்களின் விவரம்

1. சணல் பொருட்கள், பைகள் தயாரித்தல்
2. மண் பாண்டங்கள்,மண் மூலம் உருவாக்கப்பட்ட கைவினைப் பொருட்கள்
3. அலங்காரப் பொருட்கள்
4. ஆயத்த ஆடைகள் மற்றும் கம்பளி ஆடைகள் தயாரித்தல்
5. மூலிகை மருந்துப் பொருட்கள் தயாரித்தல்
6. செயற்கை ஆபரணங்கள் தயாரித்தல்
7. வீட்டு அலங்காரத்திற்கு தேவையான கைவினைப் பொருட்கள் தயாரித்தல்.
8. பாக்கு மட்டைகள் தயாரித்தல்
9. பூமாலைகள் செய்தல்
10. பனை ஓலைப் பொருட்கள் தயாரித்தல்
11. மரச் சிற்பங்கள் செய்தல்
12. கொலு பொம்மைகள்
13. பூந்தொட்டிகள்
14. முந்திரிப் பொருட்கள் பதனிடுதல்
15. தரை விரிப்புகள்
16. பொம்மைகள் தயாரித்தல்
17. ஆரத்தி தட்டுகள் செய்தல்
18. பல்வேறு பரிசுப் பொருட்கள் செய்தல்
19. ஐம்பொன் சிலைகள்
20. மணி மாலைகள்
21. ரெக்ஸின் பைகள் செய்தல்
22. சித்திரைப் பின்னல் வேலைப்பாடுடைய துணிவகைகள் செய்தல்
23. தோல் பொருட்கள்
24. நர்சரி செடிகள்
25. சோப்பு, பெனாயில், சோப் ஆயில்
26. கடல் சார்ந்த அழகு பொருட்கள் தயாரித்தல் பின்னல் மற்றும் கல் வேலைப்பாடுகளுடன் கூடிய சேலைகள்
27. வாழை நார் மற்றும் கற்றாழை நார் பொருட்கள்

மரக் கடைசல் பொருட்கள்

விலை : ரூ. 40 முதல் ரூ. 300 வரை

கிடைக்கும் மாவட்டங்கள்

திண்டுக்கல்
பெரம்பலூர்
விழுப்புரம்
திருவண்ணாமலை

மண் பொம்மைகள்

விலை : ரூ. 150 முதல்
ரூ. 200 வரை

கிடைக்கும் மாவட்டங்கள்

கன்னியாகுமரி
விழுப்புரம்
திண்டுக்கல்
சிவகங்கை
புதுக்கோட்டை
கிருஷ்ணகிரி, மதுரை

கால் மிதியடிகள்

விலை : ரூ. 10 முதல்
ரூ. 500 வரை

கிடைக்கும் மாவட்டங்கள்

ஈரோடு
சேலம்
நாமக்கல்

சுடுமண் பொம்மைகள்

விலை ரூ. 25 முதல்
ரூ. 1000 வரை

கிடைக்கும் மாவட்டங்கள்

கன்னியாகுமரி
விழுப்புரம்
திண்டுக்கல்
சிவகங்கை
புதுக்கோட்டை
கிருஷ்ணகிரி
மதுரை

சுடுமண் பொம்மைகள்

விலை : ரூ. 25 முதல்
ரூ. 1000 வரை

கிடைக்கும் மாவட்டங்கள்

கன்னியாகுமரி
விழுப்புரம்
திண்டுக்கல்
சிவகங்கை
புதுக்கோட்டை
கிருஷ்ணகிரி
மதுரை

சுங்குடிப் புடவைகள்

விலை : ரூ. 250 முதல்
ரூ. 500 வரை

கிடைக்கும் மாவட்டங்கள்

திண்டுக்கல்
மதுரை
ஈரோடு
கோயமுத்தூர்
சேலம்

சுடுமண் பொம்மைகள்

விலை ரூ. 25 முதல்
ரூ. 1000 வரை

கிடைக்கும் மாவட்டங்கள்

கன்னியாகுமரி
விழுப்புரம்
திண்டுக்கல்
சிவகங்கை
புதுக்கோட்டை
கிருஷ்ணகிரி
மதுரை



கைவினைப் பொருட்கள்

விலை : ரூ. 50 முதல்
ரூ. 400 வரை

கிடைக்கும் மாவட்டங்கள்
தூத்துக்குடி
விழுப்புரம்
திண்டுக்கல்
மதுரை

தஞ்சாவூர் ஓவியங்கள்

விலை : ரூ. 2000 முதல்
ரூ. 35,000 வரை

கிடைக்கும் மாவட்டம்
தஞ்சாவூர்

அலங்கார ஆபரணங்கள்

விலை : ரூ. 30 முதல்
ரூ. 800 வரை

கிடைக்கும் மாவட்டங்கள்
சேலம்
நாமக்கல்
ஈரோடு
கரூர்
கோயமுத்தூர்

காகிதக்கூழ் பொம்மைகள்

விலை : ரூ. 30 முதல்
ரூ. 100 வரை

கிடைக்கும் மாவட்டங்கள்
சேலம்
நாமக்கல்
ஈரோடு
கரூர்

சணல் பைகள்

விலை : ரூ. 30 முதல்
ரூ. 100 வரை

கிடைக்கும் மாவட்டங்கள்
சேலம்
நாமக்கல்
ஈரோடு
கரூர்

பட்டுப் புடவை வகைகள்

விலை : ரூ. 1500 முதல்
ரூ. 5000 வரை

கிடைக்கும் மாவட்டங்கள்
திண்டுக்கல்
மதுரை
காஞ்சிபுரம்
தஞ்சாவூர்
ஈரோடு
கோயமுத்தூர்
சேலம்

செயற்கைப் பூ மாலைகள்

விலை : ரூ. 40 முதல்
ரூ. 300 வரை

கிடைக்கும் மாவட்டங்கள்
திருவள்ளூர், காஞ்சிபுரம்.
கிருஷ்ணகிரி, மதுரை.
கன்னியாகுமரி,
அரியலூர்.

சுடுமண் பொம்மைகள்

விலை : ரூ. 25 முதல்
ரூ. 1000 வரை

கிடைக்கும் மாவட்டங்கள்
கன்னியாகுமரி
விழுப்புரம்
திண்டுக்கல்
சிவகங்கை
புதுக்கோட்டை
கிருஷ்ணகிரி
மதுரை

சணல் பைகள்

விலை : ரூ. 50 முதல்
ரூ. 600 வரை

கிடைக்கும் மாவட்டங்கள்
திருவள்ளூர், காஞ்சிபுரம்,
கோயமுத்தூர், திருவாரூர்,
சென்னை.

சுடுமண் பொம்மைகள்

விலை : ரூ. 25 முதல்
ரூ. 1000 வரை

கிடைக்கும் மாவட்டங்கள்

கன்னியாகுமரி
விழுப்புரம்
திண்டுக்கல்
சிவகங்கை
புதுக்கோட்டை
கிருஷ்ணகிரி
மதுரை

அலங்காரப் பூக்கள்

விலை : ரூ. 50 முதல்
ரூ. 750 வரை

கிடைக்கும் மாவட்டங்கள்

சேலம்
மதுரை
தஞ்சாவூர்
திருவள்ளூர்
காஞ்சிபுரம்

மென் பொம்மைகள்

விலை : ரூ. 100 முதல்
ரூ. 1000 வரை

கிடைக்கும் மாவட்டங்கள்

வேலூர்
திண்டுக்கல்
மதுரை
ஈரோடு

கோயமுத்தூர் மாவட்டம்
மேலாளர்,
மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கம்,
டவுன் ஹால் ரோடு,
மணிக்கூண்டு அருகில்,
கோயமுத்தூர்.
கைபேசி எண். 94450 34109

கடலூர் மாவட்டம்
மேலாளர்,
மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கம்,
அரசு மருத்துவமனை சாலை,
தொலைபேசி அலுவலகம் எதிரில்,
கடலூர்.
கைபேசி எண். 98650 72745

தருமபுரி மாவட்டம்
மேலாளர்,
மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கம்,
அண்ணாதுரை ரோடு,
தர்மபுரி – 1.
கைபேசி எண். 94438 78141

திண்டுக்கல் மாவட்டம்
மேலாளர்,
மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கம்,
கோபால சமுத்திரம்,
பொது மருத்துவமனை அருகில்,
திண்டுக்கல்.
கைபேசி எண். 99944 80380

ஈரோடு மாவட்டம்
மேலாளர்,
மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கம்,
குமலன் குட்டை,
பெருந்துறை ரோடு,
ஈரோடு – 11.
கைபேசி எண். 99766 61825

காஞ்சிபுரம் மாவட்டம்
மேலாளர்,
மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கம்,
ரயில்வே ரோடு,
உழவர் சந்தை அருகில்,
தலைமை தபால் நிலையம் எதிரில்,
காஞ்சிபுரம்.
கைபேசி எண். 94450 34106

கன்னியாகுமரி மாவட்டம்
மேலாளர்,
மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கம்,
வடச்சேரி,
நாகர்கோவில்,
கன்னியாகுமரி.
கைபேசி எண். 94861 63969

கரூர் மாவட்டம்
மேலாளர்,
மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கம்,
ஊராட்சி ஒன்றிய அலுவலகம் அருகில்,
தான்தோன்றி மலை,
கரூர்.
கைபேசி எண். 97905 55171

கிருஷ்ணகிரி மாவட்டம்
மேலாளர்,
மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கம்,
பேருந்து நிலையம் அருகில்,
பெங்களூர் ரோடு,
கிருஷ்ணகிரி.
கைபேசி எண். 94450 34147

துரை மாவட்டம்
மேலாளர்,
மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கம்,
டி.ஆர்.டி.ஏ. வளாகம்,
அண்ணா பேருந்து நிலையம்,
மதுரை.
கைபேசி எண். 94423 26060

நாகப்பட்டினம் மாவட்டம்
மேலாளர்,
மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கம்,
அண்ணாசிலை எதிரில்,
பேருந்து நிலையம் அருகில்,
நாகப்பட்டினம்.
கைபேசி எண். 99440 01599

நீலகிரி மாவட்டம்
மேலாளர்,
மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கம்,
ஸ்டேரிங் கிராஸ்,
குன்னூர் ரோடு,
உதகை, நீலகிரி.
கைபேசி எண். 94450 34161

நாமக்கல் மாவட்டம்
மேலாளர்,
மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கம்,
மோகனூர் ரோடு, நாமக்கல்.
கைபேசி எண். 99655 96590

பெரம்பலூர் மாவட்டம்
மேலாளர்,
மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கம்,
தினசரி அங்காடி அருகில்,
பழைய பேருந்து நிலையம்,
பெரம்பலூர் – 621 212.
கைபேசி எண். 98431 90666

புதுக்கோட்டை மாவட்டம்
மேலாளர்,
மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கம்,
காட்டுப்புது குப்பம், புதுக்கோட்டை – 622 001.
கைபேசி எண். 94432 08599

இராமநாதபுரம் மாவட்டம்
மேலாளர்,
மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கம்,
புதிய பேருந்து நிலையம் அருகில்,
இராமநாதபுரம்.
கைபேசி எண். 99421 83837

சேலம் மாவட்டம்
மேலாளர்,
மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கம்,
புதிய பேருந்து நிலையம் அருகில், சேலம்.
கைபேசி எண்.

சிவகங்கை மாவட்டம்
மேலாளர்,
மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கம்,
100 அடி ரோடு,
புதிய பேருந்து நிலையம் அருகில்,
காரைக்குடி, சிவகங்கை.
கைபேசி எண். 94435 96051

திருவண்ணாமலை மாவட்டம்
மேலாளர்,
மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கம்,
வேலூர் மெயின் ரோடு,
வெங்கைக் கால், திருவண்ணாமலை.
கைபேசி எண். 97516 43185

தலைமை அலுவலகம் : **தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்**
100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை - 600 032.
தொலைபேசி: 91 - 44 - 42085804 / 05 / 06 தொலைநகல்: 91 - 44 - 22352751
மின்னஞ்சல் : tncdwho@yahoo.co.in www.tamilnaduwomen.org

மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கங்களின் முகவரி மற்றும் தொலைபேசி எண்கள்

தஞ்சாவூர் மாவட்டம்
மேலாளர்,
மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கம்,
காந்தி ரோடு, தபால் நிலையம் அருகில்,
தஞ்சாவூர்.
கைபேசி எண். 99942 87333

தேனி மாவட்டம்
மேலாளர்,
மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கம்,
உழவர் சந்தை அருகில், பெரியகுளம் ரோடு,
தேனி – 623 531.
கைபேசி எண். 98427 08845

திருவள்ளூர் மாவட்டம்
மேலாளர்,
மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கம்,
1, ஜவகர்லால் நேரு தெரு,
திருத்தணி ரோடு, திருவள்ளூர் – 602 001.
கைபேசி எண். 93823 36702

திருவாரூர் மாவட்டம்
மேலாளர்,
மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கம்,
வ.உ.சி. சாலை,
மன்னார்குடி, திருவாரூர்.
கைபேசி எண். 94450 34215

தூத்துக்குடி மாவட்டம்
மேலாளர்,
மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கம்,
மாவட்ட நூலகம் எதிரில்,
எண். 8, தும்பைபுரம்,
தூத்துக்குடி.
கைபேசி எண். 94862 112962

திருச்சிராப்பள்ளி மாவட்டம்
மேலாளர்,
மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கம்,
பாரதிதாசன் சாலை,
திருச்சிராப்பள்ளி மாநகராட்சி எதிரில்,
திருச்சிராப்பள்ளி.
கைபேசி எண். 92452 10919

வேலூர் மாவட்டம்
மேலாளர்,
மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கம்,
பழைய மாவட்ட வளாகம்,
அலுவலர்கள் வரிசை,
வேலூர் – 632 001.
கைபேசி எண். 97905 65560

விழுப்புரம் மாவட்டம்
மேலாளர்,
மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கம்,
புதிய பேருந்து நிலையம் அருகில்,
விழுப்புரம்.
கைபேசி எண். 95854 33895

விருதுநகர் மாவட்டம்
மேலாளர்,
மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கம்,
67, புல்லை கோட்டை ரோடு,
பழைய பேருந்து நிலையம் அருகில்,
விருதுநகர்.
கைபேசி எண். 98654 59842

திருநெல்வேலி மாவட்டம்
மேலாளர்,
மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கம்,
புதிய பேருந்து நிலையம் அருகில்,
திருநெல்வேலி.
கைபேசி எண். 95004 89299



International Women's Day

நூற்றாண்டு காணும் மகளிர் தினம் (1911 - 2011)

சங்க காலம் தொட்டு மகளிரைத் தாய்த் தெய்வங்களாக முதன்மைப்படுத்தி வணங்கி வந்தனர். இடைப்பட்ட காலத்தில் ஏற்பட்ட நாகரீக மாற்றங்களினால் பெண் இனத்திற்கு அளித்து வந்த முன்னுரிமைகள் மறுக்கப்பட்டு, சமூக மற்றும் பொருளாதாரப் பங்களிப்புகளில் பின்னுக்குத் தள்ளப்பட்டனர். இது நம் நாட்டில் மட்டுமல்ல உலகளாவிய அளவில் பல்வேறு நாடுகளில் காணப்படும் ஒரு நிகழ்வாகும்.

"ஆண் ஆதிக்கம், பெண் சமத்துவமின்மை மற்றும் வேலை செய்யும் இடத்தில் அநியாயமான செயல்பாடுகள் இவையாவும் பெண்களை அறைகூவலிடவும், தொடர்ந்து நேரிடையாகப் போராடவும் வைத்தன. மேலும் பொருளாதார மேம்பாடு கண்ட பெண்கள் தன்னிறைவுடனும், உரிமைகளை அறிந்து கொண்டவர்களாகவும் போராடத் துவங்கினர்."

1908ஆம் ஆண்டு, 15 ஆயிரம் மகளிர் நியூயார்க் நகர வீதிகளில் திரண்டு போராட்டம் மேற்கொண்டனர். அப்போது தான் உலக அளவில் ஒரு மகளிர் தினத்தை கொண்டாடும் ஒரு யோசனை முதன்முறையாக முன் வைக்கப்பட்டது.

அமெரிக்காவில் சமுதாயக் குழுவின் பரிந்துரைகளுக்கு இணங்க அந்நாட்டில், 1909ஆம் ஆண்டு பிப்ரவரி 28 அன்று அமெரிக்க நாட்டு மகளிர் தினம் கொண்டாடப்பட்டது.

டென்மார்க்கில் உள்ள கோபன்ஹேகன் நகரத்தில் 1910ஆம் ஆண்டு நடைபெற்ற சமூகப் பெண்களின் இரண்டாவது பன்னாட்டுக் கூட்டத்தில் ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த பெண்மணியான சமூகத் தலைவி கிளாரா ஜெட்கின் என்பவர், உலகத்தில் உள்ள அனைத்து பெண்டிரும் பன்னாட்டு உலக மகளிர் தினத்தை கொண்டாட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தார்.

நியூயார்க் நகரில் உள்ள ஆடை தயாரிக்கும் ஆலையில் 1911ஆம் நாள் பெண் பணியாளர்கள் பணியில் ஈடுபட்டிருந்த சமயத்தில் மிகப் பெரிய தீ விபத்து ஒன்று ஏற்பட்டது. பணியாளர்கள் வேலை நேரம் முடிவதற்கு முன்பே வீட்டிற்கு செல்லாமல் இருப்பதற்காக ஆலையின் கதவுகள் மூடி தாளிடப்பட்டு இருந்ததால், தப்பித்துப் போக இயலாமல் 140 பெண்கள் தீயில் கருகி உயிரிழந்தனர். சரியான பாதுகாப்பு வசதிகளின்மையே இந்த விபத்திற்குக் காரணமாகக் கூறப்பட்டது. இந்நிகழ்ச்சியின் காரணமாக மகளிர் தங்களின் உரிமைகளை பெற்றிட போராட வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டனர்.

மேலைநாடுகளில் பன்னாட்டு மகளிர் தினம் 1910ஆம் ஆண்டிலிருந்து 1920ஆம் ஆண்டு வரை நினைவு நாளாகக் கொண்டாடப்பட்டு வந்தது.

மார்ச் 8 என்ற நாள் பெண்களின் உரிமையை நினைவுபடுத்தும் வகையில் கொண்டாடப்படும் நாளாக மலர்ந்து வருகிறது.

ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதம் 8ஆம் நாளன்று பன்னாட்டு உலக மகளிர் தினம் உலகின் பல நாடுகளிலும் கொண்டாடப்பட்டு வருகிறது.

நவீன உலகில் இந்த நாள் பெண்களின் சாதனைகளுக்குப் பாராட்டு தெரிவிக்கும் விதமாக கொண்டாடப்படுகிறது.

நம் நாட்டில் பன்னாட்டு மகளிர் தினம் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. மகளிர் தினத்தன்று பல்வேறு கொண்டாட்டங்கள் நடைபெறுகின்றன. நவீன உலகில் மகளிர் சக்தியையும், சமூகத்தில் அவர்களது முக்கியப் பங்கையும் மகளிர் தினத்தின் மூலமாக வெளிப்படுத்தப்படுகிறது. ■

சென்னை

பொதிகை மகளிர் சுய உதவிக் குழு

சென்னை, நங்கநல்லூரில் செயல்படும் பொதிகை மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் சிறப்பாக செயல்பட்டு வருகின்றனர். இக்குழுவின் உறுப்பினர்கள் கடனாகப் பெற்ற மூன்று இலட்சம் ரூபாயுடன் தங்களின் முதலீடாக ரூபாய் 72 ஆயிரம் செலுத்தி குழுவிற்கு சொந்தமாக கார் வாங்கி உள்ளனர். பொதிகை மகளிர் சுய உதவிக் குழு என்ற பெயரில் சுற்றுலா வாகனமாக அந்தக் கார் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம் கிடைக்கும் வருமானத்தில் வங்கிக் கடன் செலுத்தியது போக மாதம் ரூ. 10 ஆயிரம் வரை இலாபம் கிடைக்கிறது.

மேலும் இக்குழுவினர் ஒற்றுமையாக இணைந்து சமத்துவப் பொங்கல், மகளிர் தினம் போன்றவற்றை கொண்டாடி வருகின்றனர். சமீபத்தில் இக்குழுவிற்கு ஆலந்தூர் நகராட்சியின் மூலமாக ஆலந்தூர் நகரக் கூட்டமைப்பிற்கான கேடயம் வழங்கப்பட்டுள்ளது. ■

பொதிகை மகளிர் சுய உதவிக் குழு என்ற பெயரில் சுற்றுலா வாகனமாக அந்தக் கார் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம் கிடைக்கும் வருமானத்தில் வங்கிக் கடன் செலுத்தியது போக மாதம் ரூபாய் 10 ஆயிரம் வரை இலாபம் கிடைக்கிறது.

நாகை

பராமரிப்பு குறித்த பயிற்சி

நாகை மாவட்டம், பாகசாலை ஊராட்சியில் செயல்பட்டு வரும் விடிவெள்ளி, முல்லை, ரோஜா, செம்மலர் ஆகிய மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு மாநில பாரத வங்கி, மயிலாடுதுறை மூலம் சென்ட்ரிங் பொருட்கள், கான்கிரீட் கலவை இயந்திரம் போன்றவை வாங்க பொருளாதாரக் கடன் விடுவிக்கப்பட்டுள்ளது.

சென்ட்ரிங் பொருட்கள் மற்றும் கான்கிரீட் கலவை இயந்திரத்தினை MSS இஞ்சினியரிங் நிறுவனத்தாரிடம் பெற்று, மேற்படி குழுக்களுக்கு வழங்கப்பட்டது.

மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் மகளிர் திட்ட அலுவலர் முன்னிலையில், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், மகளிர் சுய உதவிக் குழுவினர் முன்னிலையில் வாடகைக்கு விடும் பணி சமீபத்தில் துவக்கப்பட்டது.

மேலும் மேற்படி குழுக்களுக்கு சென்ட்ரிங் பொருட்கள், கலவை இயந்திரம் உபயோகம் மற்றும் பராமரிப்பு குறித்தப் பயிற்சியும் வழங்கப்பட்டது. ■

கட்டுமானப் பணிகளுக்குத் தேவையான சென்ட்ரிங் பொருட்கள், கலவை இயந்திரம் போன்றவற்றை வாடகைக்கு விடுவதன் மூலம் கிடைக்கும் வருவாயில் வங்கிக் கடனை திரும்பச் செலுத்தியது போக மீதமுள்ள தொகையை வருவாயாகப் பெற்று வருகின்றனர்.

க ரூ ர்

பொருளாதார முன்னேற்றம்

கரூர் மாவட்டம், தாந்தோணி ஊராட்சி ஒன்றியம், பள்ளபாளையம் கிராமத்தில் பெரியகாண்டியம்மன் மகளிர் சுய உதவிக் குழு செயல்பட்டு வருகிறது. வங்கியில் சேமிப்புக் கணக்குத் துவங்கி உறுப்பினர்கள் அனைவரும் சிறுக சிறுக சேமித்து வந்தனர். பின்னர் சுழல் நிதியாக பெற்ற தொகையை உள்கடனாக வழங்கி வந்தனர். மகளிர் திட்டம் மூலம் அடிப்படை பயிற்சிகளையும், தொழிற்பயிற்சிகளையும் பெற்றுள்ளனர். வங்கியில் பொருளாதாரக் கடனாக நான்கு இலட்சம் ரூபாய் பெற்று, அத்தொகையில் மூன்று ஏக்கர் நிலத்தைக் குத்தகைக்குப் பெற்று, அதில் வாழை விவசாயம் செய்து வருகின்றனர். தூத்துக்குடியில் இருந்து 2500 வாழைக் கன்றுகளை வாங்கி வாழைத் தோப்பு அமைத்துள்ளனர். நிலத்தைப் பண்படுத்துதல், களையெடுத்தல், இயற்கை உரம் போடுதல் போன்ற அனைத்தையும் பெண்களே மேற்கொண்டு வருகின்றனர். வாழைக் கன்றுகள் மரங்களாக வளர்ந்து குலை தள்ளியவுடன், வாழைத்தார் ஒன்று ரூ. 120/– வீதம் விற்பனை செய்கின்றனர். மேலும் மகளிர் சுய உதவிக் குழுவில் இணைந்து, விவசாயத்தை மேற்கொண்டு, மாதந்தோறும் வருவாய் பெற்று ஏழ்மையை அகற்றி முன்னேறி வருகின்றனர் பெரிய காண்டியம்மன் மகளிர் சுய உதவிக் குழுவினர். ■

> “வாழைப்பூ, தண்டு, நார், இலை போன்றவற்றையும், ஊடுபயிராக விளைந்துள்ள கருணை கிழங்கு, சேனைக் கிழங்கு போன்றவற்றையும் விற்பனை செய்து வருவாய் பெறுகின்றனர். வங்கியில் பெற்றக் கடனையும் தவணை தவறாமல் செலுத்தி வருகின்றனர்.”

தி ரு ச் சி ரா ப் ப ள் ளி

பட்டறிவுப் பயணம்

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலின்படி அனைத்து மாவட்டங்களிலும் மகளிர் திட்ட செயலாக்க அலகுகள் மகளிர் மேம்பாட்டிற்காக செயல்பட்டு வருகின்றன. மகளிர் சுய உதவிக் குழுக்கள் அமைத்தல், நிர்வாகப் பயிற்சிகள், தொழிற்பயிற்சிகள் போன்றவை வழங்குதல், சுழல் நிதி, பொருளாதாரக் கடன், நேரடிக் கடன் போன்றவை பெற்றுத் தருதல், சுய தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்துத் தருதல் போன்ற நடவடிக்கைகளை மகளிர் திட்ட செயலாக்க அலகுகள் மேற் கொண்டு வருகின்றன.

சானிடரி நாப்கின் தயாரிக்கும் தொழிலை மேற்கொள்வதற்காக திருச்சிராப்பள்ளி மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு, பொருளாதாரக் கடன் பெற்றுள்ள 13 மகளிர் சுய உதவிக்குழுக்களைச் சார்ந்த 54 உறுப்பினர்கள், திருச்சிராப்பள்ளி மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கம் மூலம் திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள காந்தி கிராமம் பயிற்சி மையத்திற்கு பட்டறிவு பயணமாக அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு சானிடரி நாப்கின் தயாரிக்கும் தொழில் முறைகள் குறித்த நேரடி செயல் விளக்கம் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டது. ■

சுய உதவிக் குழுக்கள் தொடர்

வெற்றியை நோக்கி

ஒரு பயணம்

அன்புள்ள சுய உதவிக் குழு சகோதரிகளே,

வணக்கம். இப்பகுதியில் ஒரு சாதாரண நபர் ஒரு சிறந்த தொழில் முனைவோராக உயர்ந்த கதையைப் பார்ப்போம்.

அந்தக் காலத்தில் பர்மாவில் இருந்த இந்தியர்கள் தங்களுடைய சொந்த நாடான இந்தியாவிற்குத் திரும்ப வர வேண்டிய கட்டாயம். அகதிகளைப் போல கூட்டம் கூட்டமாக வந்து கொண்டிருக்கிறார்கள். அப்படி வந்த ஒரு குடும்பம் இந்திய எல்லைக்குள் வந்தபோது அவர்களின் கையில் பைசா இல்லை. அடுத்த வேளை சோற்றுக்கே வழியில்லை. எப்படியாவது குடும்பத்தில் உள்ளவர்களின் வயிற்றுப் பசியைத் தணிக்க வேண்டிய கட்டாயம் அந்தக் குடும்பத்தின் தலைவனுக்கு இருந்தது. அதற்காக யாரிடமும் யாசகம் கேட்க அவனுடைய தன்மானம் இடம் தரவில்லை. இந்நிலையில் களைப்பு மிகுதியால் அந்தக் குடும்பம் ஒரு மரத்தின் நிழலில் போய் ஓய்வு எடுத்தது.

விடாமுயற்சி இருந்ததால் ஒரு சிறு ஆதரவை வைத்துக் கொண்டு அதையே இலட்சியமாக வைத்துக் கொண்டு கடுமையாக உழைத்து முன்னேறி அதன் முழுப் பயனையும் பெற்று செல்வந்தராகி வாழ்க்கையில் ஒரு பெரிய சாதனையையே நிகழ்த்திக் காட்டி விட்டான். இந்த இலட்சியமும், விடா முயற்சியும் தொழில் முனைவோர் அனைவருக்குமே வர வேண்டும்.

அப்போது எதிரே பார்த்தால் ஒரு வெல்ல மண்டி. அங்கே வெல்லம் மொத்த வியாபாரம் மிகவும் பரபரப்பாக நடந்து கொண்டிருந்தது. அங்கே போய் ஏதாவது ஒரு வேலை கேட்டுப் பார்க்கலாம் என்று அந்தக் குடும்பத் தலைவன் அங்கு போய் வேலை கேட்கிறான். ஆனால், யாரும் வேலை கொடுக்க முன்வரவில்லை. சலித்துப் போன அவன் இறுதியாகத் தன்னுடைய எண்ணத்தை மாற்றிக் கொண்டு வெல்ல மண்டி அதிபரிடம் போய் ‘எனக்கு ஒரு மூட்டை வெல்லம் கொடுங்கள், இங்கே உங்கள் கடைக்கு முன்பே வைத்து சில்லரை விற்பனை செய்து அந்தப் பணத்தை உங்களிடமே திருப்பித் தந்து விடுகிறேன். இந்த ஒரு உதவியை மட்டும் எங்களுக்குச் செய்யுங்கள்’ என்று மன்றாடிக் கேட்டுக் கொண்டான்.

இவன் மீது இரக்கப்பட்ட அந்தக் கடைக்காரர், அவன் என்னதான் செய்கிறான் பார்க்கலாம் என்று ஒரு மூட்டை வெல்லத்தையும், ஒரு பழைய தராசையும் கொடுத்து உதவினார். இவற்றைப் பெற்றுக் கொண்ட ‘பர்மா’ அந்தக் கடைக்கு எதிரே இருந்த ஒரு மரத்தடியில் வைத்து வியாபாரம் செய்ய தொடங்கினான். பொதுவாகவே வெல்லத்தை மொத்த விலைக்கு வாங்குபவர்கள் அதை சில்லறை விலைக்கு விற்கும் போது இலாபம் வைத்து விற்பனை செய்வது வழக்கம். ஆனால் இந்த ‘பர்மா’ அவ்வாறு விற்பனை செய்யாமல் மொத்த விலைக்கே சில்லறையில் விற்பனை செய்தான். இதனால் அவன் விற்பனைக்கு வைத்திருந்த வெல்லம் சிறிது நேரத்திலேயே விற்று தீர்ந்து விட்டது. அந்தப் பணத்தை அப்படியே கொண்டு போய், கடைக்காரரிடம் கொடுத்து விட்டு அடுத்து ஒரு மூட்டை வெல்லம் வாங்கி வந்தான்.

இப்படியே இரவு வருவதற்குள் ஐந்து மூட்டை வெல்லம் விற்று தீர்ந்து விட்டது. எல்லாப் பணத்தையும் எண்ணிக் கொண்டு போய் மண்டிக்காரரிடம் கொடுத்து விட்டு, தராசையும் கொடுத்து விட்டு நன்றி சொல்லிவிட்டு வந்தான். அதில் இருந்து ஒரு பைசா கூட அவன் எடுத்துக் கொள்ளவில்லை. இது அங்கிருந்த எல்லோருக்கும் ஆச்சரியமாக இருந்தது.

நேராக தன் இருப்பிடத்திற்கு வந்தவன் அங்கே வெல்லம் விற்றது போக மீதி இருந்த ஐந்து சாக்கு பைகளை எடுத்து நன்றாக உதறி எடுத்துக் கொண்டான். நேராக கோணிப்பைகள் விற்பனை செய்யும் கடைக்குப் போனான். அங்கே அந்தஐந்துசாக்குப்பைகளையும்கொடுத்தான்.அதற்குஐந்துஅணாகிடைத்தது. அந்தப் பணம் அன்றைக்கு அந்தக் குடும்பத்தின் உணவு தேவைக்குப் போதுமானதாக இருந்தது. ‘பர்மா’ அன்று நிம்மதியாக தூங்கினான். அடுத்த நாள் அந்தக் கடைக்குப் போனபோது மண்டி உரிமையாளர் வெல்ல மூட்டைகளை விற்பனைக்கு கொடுத்ததுடன், முதல் நாள் விற்றுக் கொடுத்த ஐந்து மூட்டை வெல்லத்திற்காக ஐந்து ரூபாயினைக் கூலியாகவும் கொடுத்தார். அந்தப் பணத்தை அவன் மகிழ்ச்சியுடன் வாங்கிக் கொண்டு அந்தப் பணத்தையே முதலீடாகப் போட்டு அடுத்த நாயே சொந்தமாக வெல்ல வியாபாரத்தை தொடங்கி விட்டான். வியாபாரத்தைப் படிப்படியாக வளர்த்து அந்தப் பகுதியில் பெயர் சொல்லும் அளவுக்கு பெரிய செல்வந்தராகத் திகழ்ந்தான்.

அவன் இந்தியாவிற்குள் காலடி எடுத்து வைத்த போது ஒரு அணா கூட கையில் இல்லை. ஆனால் தன்னம்பிக்கை இருந்தது. விடாமுயற்சி இருந்தது. ஒரு சிறு ஆதரவை வைத்துக் கொண்டு அதையே இலட்சியமாக வைத்துக் கொண்டு கடுமையாக உழைத்து முன்னேறி அதன் முழுப் பயனையும் பெற்று செல்வந்தராகி வாழ்க்கையில் ஒரு பெரிய சாதனையையே நிகழ்த்திக் காட்டி விட்டான். இந்த இலட்சியமும், விடா முயற்சியும் தொழில் முனைவோர் அனைவருக்குமே வர வேண்டும். அப்பொழுது தான் முன்னேற முடியும். அடுத்து வரும் பகுதியில் ஒரு தொழில் முனைவோர் எவ்வாறு திட்ட அறிக்கையை தயார் செய்வது என்பதைப் பற்றி விரிவாகப் பார்ப்போம். ■

(தொடரும்)

ம க ளி ர்   தி ட் ட ம்

வாழ்கவே...!

முத்தான திட்டமுங்க...
முதன்மையான திட்டமுங்க! – இது
மகளிர் நலன் காக்க வந்த
மகத்தான திட்டமுங்க! – நம்ம
மகளிர் திட்டமுங்க!

வறுமையை ஒழிக்கும் திட்டமுங்க! – நமக்கு
வளமையை தர வந்த திட்டமுங்க!
கந்து வட்டி கொடுமையாலே – நாம
நொந்து நூலாய்ப் போகாமல்
நம்மைக் காத்திட வந்த திட்டமுங்க!

மகளிர் குழுவில் சேர்ந்தோமுங்க! – மன
மகிழ்ச்சியுடனே கூட்டத்திற்கு போனோமுங்க!
உழைச்ச காசை சேமிக்கவே வச்சாங்க! – நமக்கு
உடனடியா வங்கிக் கடனும் வாங்கித் தந்தாங்க!

சுழல் நிதிக் கடனும் தந்தாங்க! – நமக்கு
சுற்றுச்சூழல் காக்கவும் கற்றுத் தந்தாங்க!
சுயமாய் தொழில் தொடங்கவும் வழிசெஞ்சாங்க!
– நாம்
சுய மரியாதையோடு வாழவும் வழிவகுத்தாங்க!

மகளிர் குழுவில் சேர்ந்ததாலே – நல்ல
மகத்தான பயிற்சிகள் பெற்றோமுங்க!
எத்தனை எத்தனை பயிற்சிகள் தந்தாங்க! – அது
அத்தனையும் முத்தான பயிற்சிகள் தானுங்க!

பெற்ற பயிற்சியாலே தொழில் முனைவோர்
ஆனோமுங்க!
பெருமைமிகு கலைப் பொருட்கள்தான்
படைத்தோமுங்க!
விற்பனைக் கண்காட்சி அமைத்துத் தந்தாங்க!
– பொருட்களை
விற்பனை செய்ய வெச்சே நம்மை
ஊக்குவிச்சாங்க!

முத்தான திட்டமுங்க!
முதன்மையான திட்டமுங்க! – இது நம்ம
மகளிர் திட்டமுங்க!

– திருமதி. இரா. பாரதி,
இராயப்பேட்டை, சென்னை–14.

மாவட்டச் செய்திகள்

சென்னை

இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு முகாம்

இம்முகாமில் சென்னை மற்றும் அதன் சுற்று வட்டாரங்களில் உள்ள 30க்கும் மேற்பட்ட முன்னணி நிறுவனங்கள் ஆர்வமுடன் பங்கு பெற்று இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்கினர்.

சென்னை மாவட்ட மகளிர் திட்ட செயலாக்க அலகு மூலம் தொழிற்திறன் பயிற்சி பெற்ற இளைஞர்கள் மற்றும் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு முகாம் சமீபத்தில் நடைபெற்றது. சென்னை, நுங்கம்பாக்கம் வள்ளுவர் கோட்டம் அருகில் அமைந்துள்ள அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் நடைபெற்ற இந்த முகாமினை தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் கே. கோபால், இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்கள். இந்த முகாமில் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் இளைஞர் தொழிற்பயிற்சி திட்டத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு எலக்ட்ரீஷியன், AC மெக்கானிக், செவிலியர், ஆடை வடிவமைப்பு, செயற்கை ஆபரணங்கள் செய்தல், நகைகளில் கற்கள் பதித்தல், இருசக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் பழுது பார்த்தல், கிரேன் ஆபரேட்டர், ஜே.சி.பி. இயக்குநர் போன்ற பல்வேறு துறைகளில் தலைசிறந்த முன்னணி நிறுவனங்களின் மூலம் பயிற்சி அளிக்கப்பட்ட பயனாளிகள் கலந்து கொண்டனர். இம்முகாமில் திட்ட பயனாளிகள் தவிர்த்து வேலை இல்லாத பல இளைஞர்களும் கலந்து கொண்டு பயன் பெற்றனர். இந்நிகழ்ச்சியில் சென்னை மாநகராட்சி துணை ஆணையர் (கல்வி) திரு. பாலாஜி, இ.ஆ.ப., மற்றும் சென்னை மாவட்ட மகளிர் திட்ட அலுவலர் திருமதி. க. சுமதி ஆகியோர் கலந்து கொண்டனர். ■

வேலூர்

பனைநார் பொருட்கள் உற்பத்தி

சாமந்தி மகளிர் சுய உதவிக் குழு, வேலூர் மாவட்டம், பென்னத்தூர் கிராமத்தில் ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் இணைந்து துவக்கிய குழுவாகும். இப்பெண்கள் தங்களுக்கு கிடைக்கும் குறைவான தொகையிலும் சிக்கனமாக செலவு செய்து சேமித்து வந்துள்ளனர். பின்னர் அத்தொகையைக் கொண்டு உட்கடன் பெற்று தங்களின் தேவைகளுக்கு பயன்படுத்திக் கொண்டனர்.

தங்களுக்கு நிரந்தர வருமானம் கிடைக்கக் கூடிய தொழிலை மேற்கொள்ளும் பொருட்டு பனைநாரில் அழகிய கூடைகள் மற்றும் பொருட்களை உற்பத்தி செய்து விற்பனை செய்ய முடிவெடுத்தனர். பனைநாரில் பொருட்களை உருவாக்குவது குறித்த பயிற்சியினை மகளிர் திட்டத்தின் உதவியுடன் பெற்றனர். பின்னர் 50 விழுக்காடு மானியத்துடன் கூடிய கடனாக 50 ஆயிரம் ரூபாயினை வங்கியில் பெற்றனர்.

கடனாக பெற்ற தொகையைக் கொண்டு மூலப் பொருட்களை வாங்கி பனைநாரில் கலைநயம் மிகுந்த பொருட்களை உற்பத்தி செய்யத் துவங்கினர். இக்குழுவினர் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை செய்திட பூச்சரம் மகளிர் குழுக் கூட்டமைப்பு மிகவும் உதவிகரமாக உள்ளது. தற்போது இக்குழுவின் உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தினசரி தலா ரூபாய் 75/– வரை வருவாய் பெற்று வருகின்றனர். மாநில, மாவட்ட மற்றும் வட்டார அளவில் நடைபெறும் விற்பனைக் கண்காட்சிகளில் அரங்குகள் அமைத்து தங்கள் பொருட்களை விற்பனை செய்து வருகின்றனர்.

மேலும் தங்கள் பகுதியில் குடிநீர் வழங்குதல், தெருக்களை தூய்மைப்படுத்துதல், தெரு விளக்குகளைப் பராமரித்தல், குழந்தைகளுக்கான கலை நிகழ்ச்சிகளையும், பெண்கள் பங்கு பெறும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளையும் நடத்துதல், பள்ளிக் குழந்தைகளுக்கு பல்வேறு உதவிகளைச் செய்தல், கிராம சபாக் கூட்டங்களில் கலந்து கொள்ளுதல், குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் தங்களின் கண்களை தானம் செய்வதற்காக உரிய மருத்துவமனையில் பதிவு செய்து கொண்டிருத்தல் உட்பட பல சமூக நலச் செயல்களிலும் ஈடுபட்டு வருகின்றனர். ■

பெரம்பலூர்

பாக்கு மட்டை தட்டுகள் உற்பத்தி

பெரம்பலூர் மாவட்டம், எம்.ஜி.ஆர். நகரில் ஸ்ரீ காமாட்சி மகளிர் சுய உதவிக் குழு 2010ல் துவக்கப்பட்டது. இக்குழுவின் உறுப்பினர்கள் மகளிர் திட்டம் மூலம் பல்வேறு பயிற்சிகளைப் பெற்றுள்ளனர். பாக்கு மட்டை தட்டுகள் தயாரிப்பு தொழிலை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டு, ஆயத்தக் கட்டப் பணிகளை மேற்கொண்டனர். சுழல் நிதி மற்றும் உறுப்பினர்களின் சேமிப்புத் தொகையினை மூலதனமாகப் பயன் படுத்திக் கொள்வது என்றும், குழு உறுப்பினர்களில் 7 பேர் பாக்கு மட்டை உற்பத்தியில் ஈடுபடுவது என்றும், அவர்களுக்கு மாதம் ரூ. 1500/– வீதம் ஊதியம் வழங்குவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

பெரம்பலூர் மற்றும் சேலம் ஆகிய இடங்களில் இருந்து மூலப் பொருட்களை வாங்குகின்றனர். மேலும் மூலப்பொருட்களின் அதிக தேவைக்காக பாக்கு தோப்பு ஒன்றையும் குத்தகைக்கு எடுத்துள்ளனர். தற்போது மாதம் 25 ஆயிரம் பாக்கு மட்டை தட்டுகளை உற்பத்தி செய்து, அவைகளை கல்லூரிகளில் செயல்படும் உணவகங்களுக்கு விற்பனை செய்கின்றனர். விற்பனையை அதிகரிக்கும் நோக்கில் கோவில்கள் மற்றும் தனியார் வியாபாரிகளையும் அணுகி விற்பனை செய்ய முயற்சி மேற்கொண்டு வருகின்றனர். ■

கிடைக்கும் இலாபத் தொகை குழுவின் கணக்கில் வரவு வைக்கப்பட்டு, குழுவின் உறுப்பினர்களுக்கு மாதந்தோறும் பிரித்துத் தரப்படுகிறது. இதன் மூலம் ஒவ்வொரு உறுப்பினரும் மாதந்தோறும் ரூ. 3000/– வரை வருவாய் பெற்று வருகின்றனர்.

சிவகங்கை

மகளிர் திட்டத்திற்கு நன்றி

சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் நெடுமறம் கிராமத்தில் 2002ஆம் முதல் ஆவாரம்பூ மகளிர் சுய உதவிக் குழு செயல்பட்டு வருகிறது. இக்குழுவின் உறுப்பினர்கள் அனை வரும் பனை ஓலையில் கண்கவர் பொருட்களை உற்பத்தி செய்யும் பயிற்சியினை பெற்றுள்ளனர்.

தமிழ்நாடு மகளிர் திட்டத்தின் கீழ் மகளிர் தொழில் முனைதல் பயிற்சி பெற்று, பனை ஓலைப் பொருட்கள் உற்பத்தி செய்யும் மையத்தினை துவக்கி உள்ளனர்.

இம்மையத்தின் மூலம் உற்பத்தி செய்யப்படும் பனை ஓலை பொருட்கள் பல்வேறு இடங்களில் நடைபெறும் விற்பனைக் கண்காட்சிகளில் அரங்குகள் அமைத்தும் மற்றும் வெளி இடங்களிலும் விற்பனை செய்யப்படுகிறது.

இக்குழுவின் சிறப்பான செயல்பாடுகளும், அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களின் தரமும் அனைவராலும் பாராட்டப்படுகிறது. சமீபத்தில் சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் நடைபெற்ற வங்கியாளர்கள் கூட்டத்தில், ஆவாரம்பூ மகளிர் சுய உதவிக் குழுவினரை சிறப்பு விருந்தினர்களாக அழைத்து பெருமைப்படுத்தி உள்ளனர்.

தங்களை இந்த அளவிற்கு சமூக, பொருளாதார ரீதியாக உயர்த்திய தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்திற்கும், நிதி மற்றும் பிற உதவிகளை செய்து வரும் வங்கிகளுக்கும், சிறப்பாக செயல்பட வழிகாட்டி வரும் சிவகங்கை மாவட்ட மகளிர் திட்ட செயலாக்க அலகிற்கும் ஆவாரம்பூ மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் தங்களின் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றனர். ■

த ண் ணீ ர்

தண்ணீர் மகத்துவம்!

நம் உலகம் 70 விழுக்காடு நீரால் ஆனது. தண்ணீரில்தான் முதலில் உயிரினம் தோன்றியது. நம் உடலின் பெரும் பகுதியும் நீரால் ஆனதுதான். ஆராய்ச்சியாளர்கள் பல வருடம் ஆய்ந்து கண்டுபிடித்து விஷயம் நோய் எனப்படுவதே தாகம்தான் என்பதே. உடலிலே தண்ணீரின் அளவு குறையும் போதுதான் நோயாக உணர்கிறோம், எனவே தேவைப்படும் தண்ணீரை குடித்தாலே பல நோய்கள் பறந்து விடுமாம்.

நம் உடலின் திசுகள் இயங்கவும், இரத்தம் சத்துப் பொருட்களை உடலின் பாகங்களுக்கு கொண்டு செல்லவும், நுரையீரல் தேவையான பிராண வாயுவை வழங்கவும், எலும்புகளில் கூட தண்ணீர் தேவையாய் இருக்கிறது. எனவே நீண்ட நாள் நோயற்று வாழ நிறையத் தண்ணீர் பருகுங்கள்.

ஜீரண மண்டலத்தின் மேல் பகுதியில் ஏற்படும் நீர்ச்சத்து குறைவே நெஞ்செரிச்சலை உருவாக்குகிறது. கவனியாது விட்டால் அது தொடர்பான பல நோய்களை அறிமுகப்படுத்தும். அமில தடுப்பு மாத்திரைகள் வேதனையை குறைக்குமே தவிர முழுமையான நிவாரணத்தை தராது. தேவையான தண்ணீர் அருந்தி வருவதுதான் குணமடையும் வழி.

மூட்டு இணைப்புகளில் உண்டாகும் தண்ணீர் பற்றாக்குறைதான் மூட்டு வலிக்கு காரணம். வலி நிவாரண மருந்துகள் உபயோகிப்பது வலி நிவாரணம் தருமே ஒழிய நோயை குணமாக்காது. சிறிய அளவு உப்பு சத்துடன் கூடிய தண்ணீர் அதிகம் அருந்தினால் மூட்டு வலி குணமடையும்.

முதுகெலும்புத் தொகுதியில் உடலின் எடையைத் தாங்குவதில் தண்ணீல் ஒரு மெத்தை போல் செயல்படுகிறது. இந்த எலும்புகளில் நீர் சத்து குறையும் போது

இடுப்பு வலி, முதுகுவலி, கழுத்து வலி ஏற்படுகிறது. சரியான அளவு தண்ணீர் அருந்துவதே இவ்வலிகளில் இருந்து விடுதலை தரும். இதயம் மற்றும் நுரையீரலில் உண்டாகும் தண்ணீர் பற்றாக்குறையே ஆஞ்சினா எனும் நெஞ்சு வலிக்குக் காரணம். அதிகப்படியான தண்ணீர் அருந்துவது இந்த நோயைக் குணமாக்குகிறது.

மூளை மற்றும் கண்களுக்குத் தேவையான தண்ணீர் அளவு குறைவதால்தான் ஒற்றைத் தலைவலி உண்டாகிறது.

உடலில் தண்ணீர் வறண்டு போகும்போது செரிக்கப்பட்ட உணவிலிருந்து குடல் வரை தண்ணீரை முழுமையாக உறிஞ்சி விடுவதால் மலம் இறுகி குடலில் உராய்ந்து புண்ணாக்குகிறது. அடிவயிற்றில் வேதனை உண்டாக்குகிறது. இதன் தொடர்ச்சியே இரத்தக் கசிவு, மூலம், குடல் புற்று போன்றவை. போதுமான தண்ணீர் அருந்தினால் இந்நோய் குணமாகும்.

உடலின் தண்ணீர் காற்றில் ஆவியாகி போய்விடாமல் காற்றுப் பாதைகளில் உடல் தடை ஏற்படுவதே ஆஸ்த்துமாவிற்குக் காரணம். அதிக அளவு தண்ணீரை சிறிது உப்புச் சத்துடன் எடுத்துக் கொள்வது நுரையீரலில் இருந்து சளியை வெளியேற்றி பிராணவாயு தடங்கலின்றிக் கிடைக்கச் செய்யும்.

போதுமான தண்ணீரின்றி உடலில் உண்டாகும் வறட்சிதான் உயர் இரத்த அழுத்தத்திற்குக் காரணம். தண்ணீரும் சிறிது உப்பும் அருந்தி வருவது இரத்தக் கொதிப்பை குணமாக்குகிறது. இதை கவனியாது விட்டால் மாரடைப்பு, பக்கவாதம், மூளைப் பாதிப்பு போன்ற ஆபத்துக்களை ஏற்படுத்தி விடும். நீரிழிவு நோய்க்குக் காரணம், தண்ணீர் பற்றாக்குறையே, தண்ணீர் அதிக கொலஸ்ட்ராலை கட்டுப்படுத்துகிறது.

தினமும் அதிகாலையில் தூக்கத்தில் இருந்து எழுந்ததும் வெறும் வயிற்றில் தண்ணீர் அருந்துவது தற்போது பிரபலமாகி வருகிறது.

கடுமையான வியாதிகளான தலைவலி, உடல்வலி, இதய நோய்கள், எலும்பு சம்பந்தப்பட்ட நோய்கள், வேகமான இதயத் துடிப்பு, வலிப்பு நோய், அளவுக்கதிகமான உடல் பருமன், ஆஸ்த்துமா, காசநோய், மூளைக்காய்ச்சல், சிறுநீரகம் மற்றும் சிறுநீரக வியாதிகள், வாந்தி பேதி, வாய்வுக் கோளாறுகள், மூல வியாதி, சர்க்கரை வியாதி, சகலவிதமான கண்நோய்கள், கர்ப்பப்பை புற்று நோய், ஒழுங்கீனமான மாதவிடாய் கோளாறுகள் போன்றவற்றுக்கு இந்த நீர் மருத்துவம் 100 விழுக்காடு பயனளிக்கிறது என தற்போது ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

நீர் மருத்துவ முறைகள்

1) காலையில் தூங்கி எழுந்ததும், பல் துலக்கும் முன்னே சுமார் 650 மி.லி. அளவு தண்ணீர் அருந்துங்கள்.

2) பல் துலக்கி வாய் அலம்பிய பின் 45 நிமிடங்களுக்கு உணவோ, நீராகாரமோ எதுவும் உட்கொள்ளக் கூடாது.

3) 45 நிமிடங்களுக்குப் பின் வழக்கமான உங்கள் உணவை உட்கொள்ளலாம்.

4) காலை உணவிற்குப் பின்னர் 15 நிமிடங்களுக்கும், மதியம் மற்றும் இரவு உணவிற்கு பின்னர் 2 மணி நேரங்களுக்கும் எந்த வகையான உணவுப் பொருட்களோ அல்லது பானங்களோ அருந்தக் கூடாது.

5) முதியோர், நோயாளிகள் அல்லது 650 மி.லி. அளவு தண்ணீரை தொடக்கத்திலேயே அருந்த முடியாதவர்கள் ஆரம்பத்தில் கொஞ்சம் கொஞ்சமாக நீர் உட்கொண்டு நாளடைவில் 650 மி.லி. அளவு தண்ணீரை அருந்தப் பழகலாம். ■

போதுமான தண்ணீரின்றி உடலில் உண்டாகும் வறட்சிதான் உயர் இரத்த அழுத்தத்திற்குக் காரணம். தண்ணீரும் சிறிது உப்பும் அருந்தி வருவது இரத்தக் கொதிப்பை குணமாக்குகிறது.

எந்த நோய்க்கு எத்தனை நாட்கள் இந்த முறையை பின்பற்ற வேண்டும் என்ற விபரங்களை கீழே காணலாம்.

1. உயர் இரத்த அழுத்தம் – 30 நாட்கள்
2. வாய்வுக் கோளாறுகள் – 1 நாள்
3. சர்க்கரை வியாதி – 30 நாட்கள்
4. மலச்சிக்கல் – 10 நாட்கள்
5. புற்று நோய்கள் – 180 நாட்கள்
6. காச நோய் – 90 நாட்கள்
7. மூட்டு நோய்கள் – துவக்கத்தில் வாரம் 3 நாட்களும், இரண்டாவது வாரத்திலிருந்து தினமும் இம்முறையினைப் பின்பற்ற வேண்டும்.

பக்க விளைவுகள் எதுவும் இல்லாத மருத்துவ முறை இது. எனினும் நீர் அதிகமாக உட்கொள்வதால் அடிக்கடி சிறுநீர் கழிக்க வேண்டி வரும். ஆனாலும் இந்த முறையை நமது அன்றாட கடமைகளில் ஒன்றாகப் பின்பற்றுவது மிகவும் நன்மை தரும் என்றே சொல்ல வேண்டும். எனவே நீர் மருத்துவ முறையை மேற்கொண்டு ஆரோக்கியமாகவும், சுறுசுறுப்பாகவும் இருங்கள்.

மாவட்டச் செய்திகள்

ஈ ரோ டு

மேலாண்மை இயக்குநரின் ஆய்வு

அங்கன்வாழ நடத்தி வரும் வளர்பிறை மகளிர் சுய உதவிக் குழு, மாயாஸ் மகளிர் சுய உதவிக் குழு மற்றும் கோட்டாம்பாளையத்தில் செயல்பட்டு வரும் ஸ்ரீ பன்னாரி அம்மன் மகளிர் சுய உதவிக்குழு ஆகியவற்றைப் பார்வையிட்டு, அந்த குழுக்களின் செயல்பாடுகள் குறித்த விபரங்களைக் கேட்டறிந்தார்.

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் கே. கோபால், இ.ஆ.ப., அவர்கள் ஈரோடு மாவட்ட மகளிர் திட்ட செயலாக்க அலகின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் முன்னிலையில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில், மகளிர் திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டது.

ஆய்வின் போது உரையாற்றிய மேலாண்மை இயக்குநர் அவர்கள், விரைவில் தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம் துவக்கப்பட உள்ளதாக குறிப்பிட்டதுடன், சிறப்பாக செயல்பட்ட அந்தியூர் ஸ்ரீகணபதி, கோபி பாரியூர் மற்றும் பவானி ஆகாய தாமரை ஆகிய சுய உதவிக் குழுக்களுக்கு மணிமேகலை விருதுகளையும் வழங்கினார். பின்னர் பவானி வட்டாரம், கவுந்தப்பாடியில் செயல்பட்டு வரும் வட்டார அளவிலான கூட்டமைப்பினைப் பார்வையிட்டார். கூட்டமைப்பில் இணைந்துள்ள குழுக்களின் விபரங்கள், அவைகள் உற்பத்தி செய்யும் பொருட்களின் தன்மை, கூட்டமைப்பு பெற்றுள்ள பெருங்கடன் போன்ற விபரங்களைக் கேட்டறிந்தார். மேலும் சிறப்பாக செயல்பட ஆலோசனைகளை வழங்கினார். சிறப்பான செயல்பாட்டிற்கான ஆலோசனைகளையும், அறிவுரைகளையும் வழங்கினார். ■

> சிறப்பாக செயல்பட்ட அந்தியூர் ஸ்ரீ கணபதி, கோபி பாரியூர் மற்றும் பவானி ஆகாய தாமரை ஆகிய சுய உதவிக் குழுக்களுக்கு மணிமேகலை விருதுகளையும் வழங்கினார். பின்னர் பவானி வட்டாரம், கவுந்தப்பாடியில் செயல்பட்டு வரும் வட்டார அளவிலான கூட்டமைப்பினைப் பார்வையிட்டார்.

ம து ரை

கிராமச் சந்தை கட்டுமானப் பணிகள் ஆய்வு

மகளிர் சுய உதவிக் குழுக்களின் வாயிலாக மகளிர் முன்னேற்றம் அடைந்து வருகின்றனர். இதற்கு உறுதுணையாக தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலுடன் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் மகளிர் திட்ட செயலாக்க அலகுகள் செயல்பட்டு வருகின்றன.

மதுரை மாவட்டம், திருமங்கலம் ஊராட்சி ஒன்றியம், செக்காணூரணி ஊராட்சியில் கட்டப்பட்டு வரும் கிராமச் சந்தையினை தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் கே. கோபால், இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு, கட்டுமானப் பணிகளை விரைந்து முடிக்க, திட்ட அலுவலர் மற்றும் அதிகாரிகளுக்கு உத்திரவிட்டார்.

பின்னர் மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவல கூட்ட அரங்கில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் மேலாண்மை இயக்குநர் அவர்கள் கலந்து கொண்டார். இந்தக் கூட்டத்தில் மதுரை, திண்டுக்கல், தேனி, இராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர், தூத்துக்குடி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மகளிர் திட்ட செயலாக்க அலகுகளின் திட்ட அலுவலர்கள், உதவித் திட்ட அலுவலர்கள், மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்க மேலாளர்கள் கலந்து கொண்டார்கள்.

மகளிர் திட்டத்தின் செயல்பாடுகள், குழுக்கள் மற்றும் கூட்டமைப்புகளின் செயல்பாடுகள், குழுக்களின் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்துதல் தொடர்பான விபரங்கள் குறித்து இக்கூட்டத்தில் ஆய்வு மேற் கொள்ளப்பட்டது. ■

மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்க மேலாளர்கள் கலந்து கொண்டார்கள். மகளிர் திட்டத்தின் செயல்பாடுகள், குழுக்கள் மற்றும் கூட்டமைப்புகளின் செயல்பாடுகள், குழுக்களின் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்துதல் தொடர்பான விபரங்கள் குறித்து இக்கூட்டத்தில் ஆய்வு மேற் கொள்ளப்பட்டது.

மக்கள் கற்றல் மையம் (மகமை)

21.01.2009 அன்று உதித்தது திருநெல்வேலி மாவட்ட மக்கள் கற்றல் மையம். வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் திறமான பயிற்சியினாலும், மாவட்ட பணியாளர்களின் சிறப்பான வழி காட்டுதலாலும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம், சமூக தணிக்கைக் குழு, கூட்டமைப்பு, CST, CDF மற்றும் வாழ்வாதார வல்லுனர்கள் என பல துறைகளிலும் அனுபவம் பெற்ற மற்றும் சிறப்பாக செயல்படும் ஊராட்சிகளிலிருந்து திறமையான வல்லுனர்களைக் மகமைக்குத் தேர்வு செய்து அனுப்பினர். திட்டத்தின் சிறப்பம்ச மான “மக்களை மக்களே வழி நடத்தி செல்லும் அணுகுமுறை” (Community Driven Development Approch) மூலம் சமூக வல் லுனர்களே மகமையின் செயற்குழு மற்றும் பணியாளர்களாக செயல்பட்டு வழிநடத்திச் செல்கின்றனர்.

அரசு மற்றும் பிற துறையினருக்கும் மகமை வல்லுனர்கள் மூலம் சேவை அளித்து வல்லுனர்களின் வாழ்க்கையில் வசந்தமான மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. ■

> திட்டத்தின் சிறப்பம்சமான “மக்களை மக்களே வழி நடத்தி செல்லும் அணுகுமுறை” (Community Driven Development Approch) மூலம் சமூக வல்லுனர்களே மகமையின் செயற்குழு மற்றும் பணியாளர்களாக செயல்பட்டு வழிநடத்திச் செல்கின்றனர்.

மாற்றுத் திறனாளிகள் உருவாக்கிய பசுமைப் புரட்சி!

திருநெல்வேலி மாவட்டத்தில் வாழ்ந்து காட்டு வோம் திட்டம் செயல்படுத்தப்படும் ஆறு வட்டாரங் களில் உள்ள 156 ஊராட்சிகளிலும் மாற்றுத் திறனாளி களுக்கான மரக்கன்றுகள் நடும் விழா 19.01.2011 அன்று நடைபெற்றது. இதில் 9,689 மரக் கன்றுகள் நடப்பட்டன. வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலம் இன்று மாற்று திறானாளிகள் வாழ்க்கைத் தரத்திலும், சமூகத்திலும் ஒரு அங்கீகாரம் கிடைத்துள்ளது. வீட்டில் அடங்கி, முடங்கிக் கிடந்த அவர்கள் வாழ்க்கையில் முன்னேற வழி வகுத்துள்ளது. இதன் மூலம் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தில் உள்ள மாற்றுத் திறனாளிகள் சமூக மாற்றத்தில் ஓர் புதிய புரட்சியை ஏற்படுத்தியுள்ளனர்.

“பாதங்கள் நடப்பதற்கு தயாராக இருந்தால் பாதைகள் ஒன்றும் தடையில்லை! ” ■

வாழ்ந்து காட்டுவோம்

இளைஞர்களைத் தட்டி எழுப்பிய வேலை வாய்ப்பு முகாம்!

வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலம் திருநெல்வேலி மாவட்டத்தில் ஜனவரி 31 வரை இளைஞர் திறன் வளர்ப்பு பயிற்சி மற்றும் நேரடி வேலை வாய்ப்பின் மூலம் சுமார் 8,525 இளைஞர்கள் ஓட்டுனர் பயிற்சி, JCB பயிற்சி, TVS போர்க் லிப்ட் ஆபரேட்டர், உணவு மேலாண்மை மற்றும் கார்மெண்ட்ஸ் மூலம் வேலை வாய்ப்பு பெற்றுள்ளனர். மாவட்ட அளவிலான வேலை வாய்ப்பு முகாமில் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலம் கலந்து கொண்ட 1,731 இளைஞர்களில் 423 நபர்கள் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பைப் பெற்று பயன் பெற்று வருகின்றனர். ■

> இளைஞர் திறன் வளர்ப்பு பயிற்சி மற்றும் நேரடி வேலை வாய்ப்பின் மூலம் சுமார் 8,525 இளைஞர்கள் ஓட்டுனர் பயிற்சி, JCB பயிற்சி, TVS போர்க் லிப்ட் ஆபரேட்டர், உணவு மேலாண்மை மற்றும் கார்மெண்ட்ஸ் மூலம் வேலை வாய்ப்பினைப் பெற்றுள்ளனர்.

பூக்கள் கட்டுதல்

பனையூர் ஊராட்சியை சார்ந்த நாங்கள் மகளிர் சுய உதவிக் குழுக்களாக சேர்ந்து வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலம் பூக்களைக் கட்டி விற்பனை செய்து வருகிறோம்.

இந்த திட்டத்தின் மூலம் நாங்கள் கடன் பெற்று தொழில் செய்ய விரும்புகிறோம். மேலும் எங்கள் வாழ்வாதாரத்தை உயர்த்திக் கொள்ளவும் ஆர்வமாகவும் இருக்கிறோம்.

இந்தத் திட்டத்தின் வாயிலாக எங்கள் பகுதியில் மென் மேலும் இலக்கு மக்களுக்கு உதவிகள் செய்து அவர்களின் வாழ்வாதாரத்தைப் பெருக்கி வறுமை நிலையினை அகற்றிய வாழ்ந்து காட்டுவோம் திட்டத்திற்கும் வறுமை ஒழிப்புச் சங்கத் திற்கும் எங்களது நன்றியை காணிக்கையாக்குகிறோம். ■

மனமார்ந்த நன்றி!

மானூர் ஒன்றியம், கட்டாரங்குளம் ஊராட்சியை சேர்ந்த சுரேஷ்குமார் ஆகிய நான் 10ம் வகுப்பு படித்து விட்டு வேலை இல்லாமல் இருந்து வந்தேன். எனது குடும்பம் மிகவும் வறுமையில் இருந்து வந்தது. வாழ்ந்து காட்டுவோம் திட்டம் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மூலம் JCB பயிற்சி பெற்றேன். தற்போது பயிற்சி முடித்து விட்டு ஜெயராஜ் எர்த் மூவர்ஸ் கம்பெனியில் மாத ஊதியம் ரூ. 4,000/- பெற்று பணி புரிந்து வருகின்றேன்."கேள்விக் குறியாக இருந்த என் வாழ்க்கையை ஆச்சரிக்குறியாக மாற்றி" நிலையான வருமானம் ஈட்டித் தந்த வாழ்ந்து காட்டுவோம் திட்டம் கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்திற்கு எனது மனமார்ந்த நன்றி!

"கேள்விக் குறியாக இருந்த என் வாழ்க்கையை ஆச்சரிக்குறியாக மாற்றி" நிலையான வருமானம் ஈட்டித் தந்த வாழ்ந்து காட்டுவோம் திட்டம் கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்திற்கு எனது மனமார்ந்த நன்றி!

மணிமேகலை விருது பெற்ற சிறந்த கூட்டமைப்பு!

திருநெல்வேலி மாவட்டம், மானூர் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு 2010–2011ஆம் ஆண்டிற்கான மாவட்ட அளவிலான மணிமேகலை விருதினைப் பெற்றுள்ளது. எங்கள் கூட்டமைப்பு 2008ஆம் ஆண்டு வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலம் மறுசீரமைக்கப்பட்டது. எங்கள் கூட்டமைப்பிற்கு ஆளுமை பொறுப்புணர்வு பயிற்சி, நிதி மேலாண்மை பயிற்சி, கணக்காளர் பயிற்சி போன்றவை அளிக்கப்பட்டு களப்பயணம் அழைத்துச் செல்லப்பட்டது. எங்கள் கூட்டமைப்பிற்கு வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தில் இருந்து அமுதசுரபி நிதியாக ரூபாய் 7,70,000/– கொடுக்கப்பட்டது. அதனை குழுக்களுக்கு குறுநிதிக் கடன் தேவையின் அடிப்படையில் கடன் வழங்கினோம். கடன் திட்டம் முறையாகச் செயல்படுவதை எங்கள் துணைக்குழுவும் தொடர்ந்து கண்காணித்து வந்தது.

மேலும் திட்ட ஒருங்கிணைப்பு அணியின் உதவியுடன் வங்கி பெருங்கடன் பெறுவதற்கு ஏற்பாடு செய்து மானூர் இந்தியன் ஓவர்சீஸ் வங்கிக்கு அனுப்பினோம். அதன் மூலம் ரூ. 27,38,000/– பெருங்கடனாகப் பெற்று குழுக்களுக்கு வழங்கி குழுக்களின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தோம். எங்கள் செயல்பாட்டின் மூலம் நாங்கள் 2010–2011ஆம் ஆண்டு மணிமேகலை விருது பெற விண்ணப்பம் செய்தோம். சமீபத்தில் மணிமேகலை விருதினையும் பெற்றுள்ளோம்.தற்போது எங்களது கூட்டமைப்பிற்கு மகளிர் மேம்பாட்டு திட்ட மானியத்துடன் பொருளாதாரக் கடனாக ரூபாய் 6,50,000/– பெற்று பல்பொருள் அங்காடி நடத்தத் தொடங்கியுள்ளோம். மேலும் பொருட்கள் வாங்க, விற்க ரூபாய் 1,80,000/– மதிப்புள்ள ஆட்டோ ஒன்றும் மகளிர் திட்ட உதவியுடன் பெறக் காத்திருக்கிறோம்.

"கூட்டமைப்பின் வளர்ச்சி – நாட்டின் வளர்ச்சி!" ■

இளைஞர் குழு மூலம் வெண்பன்றி வளர்ப்பு!

திருநெல்வேலி மாவட்டம், குருவி குளம் ஒன்றியத்தில் மகேந்திரவாடி ஊராட்சியில் இளைஞர் குழு மூலம் வெண் பன்றி வளர்ப்பு தொழிலைத் தொடங்கி 2 1/2 வருடங்களாக செயல்பட்டு வருகிறது. இதற்கான நிதி திட்டத்தின் மூலமும், வங்கியின் மூலமும் பெறப்பட்டு செயல்படுத்தி வருகின்றனர். இதில் உறுப்பினர்களாக 20 நபர்கள் உள்ளனர். முதலில் 2 பன்றி குட்டிகளை அபிசேகப்பட்டியில் வாங்கி அதற்கு காப்பீடு செய்து வளர்த்து வந்தனர். தற்போது ஒன்பது பன்றிகள் 32 குட்டிகள் போட்டுள்ளன. இதற்கான உணவுகள் எடுத்து வருவதற்காக ஆட்டோ ஒன்றையும் வாங்கியுள்ளனர். இன்னும் ஓரிரு மாதங்களில் வருமானம் பெறக்கூடிய நிலையில் உள்ளனர். இந்தக் குழுவின் செயல்பாடுகளை பார்வையிட்ட மாநில வல்லுனர் வர்களின் அறிவுரைப்படி திட்ட செயல்பாடுகளை நடத்தி வருகின்றனர். மாவட்ட திட்ட அலுவலகத்தின் உதவியுடனும் அவர்களின் அறிவுரைப்படியும் எங்கள் சங்கம் வெற்றிப் பாதையில் சென்று கொண்டிருக்கிறது என்கின்றனர் இளைஞர் குழுவின் உறுப்பினர்கள். ■

கார்கோடகன் பால் உற்பத்தியாளர்கள் சங்கம்

மானூர் ஊராட்சிக்குட்பட்ட கோடகநல்லூர் கிராமத்தில் வறுமை ஒழிப்புச் சங்கத்தின்மூலம்வளஆய்வுநடத்தப்பட்டது.அதில்பெரும்பாலானவர்கள் கறவை மாடு வளர்ப்புத் தொழிலை செய்ய திட்டமிட்டனர். அதன் அடிப்படையில் சுய உதவிக் குழுக்களை சேர்ந்த 40 நபர்கள் இணைந்து "கார்கோடகன் பால் உற்பத்தியாளர்கள் சங்கம்" ஏற்படுத்தி சங்கங்களின் பதிவுச் சட்டத்தின் கீழ் கூட்டமைப்பினை முறையாகப் பதிவு செய்து தொழில் திட்டம் தயாரித்து மாநில அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டது.

கூட்டமைப்பின் மூலம் பேட்டை இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் பெருங்கடனாக ரூ. 8 இலட்சம் பெறப்பட்டது. இதில் ஒரு உறுப்பினருக்கு ரூ. 20 ஆயிரம் வீதம் கடனாக கொடுக்கப்பட்டது. 40 பேர் பங்குத் தொகையாக ஒரு உறுப்பினருக்கு ரூ. ஆயிரம் வீதம் ரூ. 40 ஆயிரம் பெறப்பட்டது. வறுமை ஒழிப்புச் சங்கத்தின் மூலம் அடிப்படை வசதிகளுக்கு ரூ. 20 ஆயிரம் பெறப்பட்டது. தற்போது கறவை மாடு வளர்ப்பதன் மூலம் மாதம் ஒன்றுக்கு ரூ. 4,000/– முதல் ரூ. 5,000/– வரை ஒவ்வொரு உறுப்பினரும் வருமானம் பெற்று வருகின்றனர். ■

ஏழைகளுக்கு கிடைத்த பொன்னி

திருநெல்வேலி மாவட்டம், குருவி குளம் ஒன்றியம், கலிங்கப்பட்டி பகுதியில் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட வரகனூர் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பினர் இலக்கு மக்களுக்கு குறைந்த விலையில் பொன்னி அரிசி பெற்றுத் தர ஏற்பாடு செய்துள்ளனர்.

கூட்டமைப்பின் பொதுக்குழு கூட்டத்தில் முடிவு செய்து, அமுதசுரபி நிதியில் இருந்து ரூ. ஒரு இலட்சம் கடன் பெற்று "அன்னக் களஞ்சியம் அரிசி திட்டம்" என்ற பெயரில் தனிக் கணக்குத் துவங்கி செயல்படுத்தி வருகின்றனர்.

கூட்டமைப்பு உறுப்பினர்களின் அரிசி தேவை ஐந்து டன். இதனை மொத்தமாக அரிசி ஆலைகளில் கொள்முதல் செய்து, கொள்முதல் விலையில் கிலோவிற்கு ரூ. 1/– இலாபம் வைத்து விற்கத் தீர்மானிக்கப்பட்டது. அரிசி விற்பனை தொகையினைக் குழுக்களிடம் இருந்து வார தவணையாகப் பெற்று வருகிறது. சுலபமான தவணையில் ஏழை மக்களுக்கு குறைந்த விலையில் தரமான அரிசி கிடைக்க கூட்டமைப்பினர் ஏற்பாடு செய்துள்ளனர்.

கூட்டமைப்பின் சிறப்பான செயல்பாட்டின் மூலம் தங்கள் கிராமத்தை வெற்றிப் பாதையில் அழைத்துச் செல்வோம் என்று உறுதி கூறுகின்றனர் கூட்டமைப்பின் உறுப்பினர்கள்.

> கூட்டமைப்பின் பொதுக்குழு கூட்டத்தில் முழவு செய்து, அமுதசுரபி நிதியில் இருந்து ரூ. ஒரு இலட்சம் கடன் பெற்று "அன்னக் களஞ்சியம் அரிசி திட்டம்" என்ற பெயரில் தனிக் கணக்குத் துவங்கி செயல்படுத்தி வருகின்றனர்.

பூந்தோட்டம்

"மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா" என்ற வாக்கிற்கிணங்க பெரும்பத்தூர் ஊராட்சியை சேர்ந்த நாங்கள் கற்பகம் மகளிர் சுய உதவிக் குழு அமைத்து, பஞ்சாயத்து அளவிலான கூட்டமைப்பில் இணைந்து செயல்பட்டு வருகிறோம். தமிழக அரசின் கீழ் செயல்பட்டு வரும் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலம் எங்கள் பகுதியில் உள்ள இந்தியன் வங்கி, கரிவலம்வந்த நல்லூர் கிளையில் ரூபாய் நான்கு இலட்சம் பொருளாதாரக் கடனாகப் பெற்று, மல்லிகைப் பூந்தோட்டம் அமைத்து, தினமும் பூக்களைப் பறித்து விற்பனை செய்து நல்ல இலாபம் ஈட்டி வருகிறோம். நாங்கள் பறித்த பூக்களை மொத்த மாக எடுத்துச் சென்று ஸ்ரீவில்லிப்புத்தூர் பகுதியில் உள்ள கடைகளில் விற்பனை செய்து, எங்கள் வருமானத்தை உயர்த்தியுள்ளோம். "கை கொடுக்கும் திட்டத்திற்கும், வாழ்வு கொடுத்த வங்கிக்கும் மலர் கொடுத்து வாழ்த்துகிறோம்" ■

கட்டடக் கலையில் வருங்காலச் சிற்பிகள்!

திருநெல்வேலி மாவட்டத்தில் செயல்பட்டு வரும் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலம் தேர்வு செய்யப்பட்ட ITI மூலம் 6 ஒன்றியத்திற்குட்பட்ட 156 கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் மூலம் 18 முதல் 35 வயதிற்குட்பட்ட இளைஞர்கள் தேர்வு செய்யப்பட்டு 45 நாட்கள் நேரடி செய்முறைப் பயிற்சி மற்றும் கட்டுமானத்திற்காக உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது. பயிற்சி காலத்தில் நாள் ஒன்றுக்கு ரூபாய் 100/– வீதம் ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டது. பயிற்சி நிறுவனத்திற்கு பயிற்சி கட்டண மாக ரூபாய் 4020/– வீதம் வழங்கப்படுகிறது. இப்பயிற்சி நிறுவனத்தில் பயிற்சி பெறும் இளைஞர்களை, மாநிலத் திட்ட இயக்குநர் திரு. தீரஜ்குமார், இ.ஆ.ப., அவர்கள் நேரடியாகச் சென்று பார்வையிட்டார்.

கானார்பட்டி ஏஜஸ் ITIயில் 30 நபர்களும், புளியங்குடி லெட்சுமி ITIயில் 60 நபர்களும், திருவேங்கடம் நாகாஸ் ITIயில் 15 நபர்களும் மற்றும் சங்கரன்கோவில் செந்தமிழ் ITIயில் 120 நபர்களும் என மொத்தம் 225 நபர்கள் தொழிற்பயிற்சி பெற்று, தங்களது பகுதியில் பணி வாய்ப்புப் பெற்று மாதம் ரூபாய் 9 ஆயிரம் வரை வருமானம் பெற்று வருகின்றனர். ■

பயிற்சியும் முயற்சியும் இருந்தால் வானமும் வசப்படும்!

எனது பெயர் அஜிதா, நான் மேலநீலிதநல்லூர் ஒன்றியம் வடக்கு பனவடலி ஊராட்சி திருமலாபுரத்தைச் சார்ந்தவள். நான் எட்டாம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனது குடும்பம் வறுமையில் வாழ்ந்து வந்தது. இந்நிலையில் எங்கள் பகுதியில் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் ஏற்படுத்தப்பட்டது. இச்சங்கத்தின் மூலம் நான் அழகு கலை பயிற்சி பெற்றேன். இப்பயிற்சி முடித்து மத்திய அரசு சான்றிதழ் பெற்று எங்களது கிராமத்திற்கு அருகில் உள்ள சங்கரன்கோவில் பகுதியில் தங்கம் என்ற பெயரில் அழகு நிலையம் வைத்து தினமும் ரூ. 300/– முதல் ரூ. 500/– வரை வருமானம் கிடைக்கிறது. மாதம் ரூ. 15 ஆயிரம் வரை வருமானம் கிடைக்கிறது. எனது வாழ்வாதாரத்தை உயர்த்திய வாழ்ந்து காட்டுவோம் திட்டத்திற்கும், வறுமை ஒழிப்புச் சங்கத் திற்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். ■

நான் எட்டாம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனது குடும்பம் வறுமையில் வாழ்ந்து வந்தது. இந்நிலையில் எங்கள் பகுதியில் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் ஏற்படுத்தப்பட்டது.

ஒன்றுபட்டோம் உயர்ந்தோம்

திருநெல்வேலிமாவட்டம்,சுப்பலாபுரம்ஊராட்சியைச்சேர்ந்த தெபோராள் மகளிர் குழுவைச் சேர்ந்த உறுப்பினர்கள் 14 பேர் சேர்ந்து கரிவலம்வந்த நல்லூர் பாண்டியன் கிராம வங்கியில் சேமிப்புக் கணக்கினைத் தொடங்கி சேமித்து வருகின்றனர். வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் கீழ் பஞ்சாயத்து அளவிலான கூட்டமைப்பில் இணைந்து செயல்பட்டு வரும் இவர்கள், ஜவுளி வியாபாரம் செய்து தங்கள் வாழ்வாதாரத்தை உயர்த்திக் கொள்வதற்காக ரூபாய் 3 இலட்சம் பொருளாதாரக் கடனாகப் பெற்று நல்ல முறையில் தொழில் செய்து வருகின்றனர். தற்போது இந்த வியாபாரத்தின் தெபோராள் சுய உதவிக் குழுவினர் மாதந் தோறும் நல்ல வருவாய் பெற்று வருகின்றனர். தங்களுக்கு கடன் வழங்கி, சுய தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்து, வருமானத்தை உயர்த்திய வாழ்ந்து காட்டுவோம் திட்டம் எங்களைப் போன்ற மகளிரின் வாழ்வாதாரத்தை முன்னேற்ற வந்த திட்டமாகும் என நன்றியுடன் கூறுகின்றனர் இவர்கள். ■

> தங்கள் வாழ்வாதாரத்தை உயர்த்திக் கொள்வதற்காக ரூபாய் 3 இலட்சம் பொருளாதாரக் கடனாகப் பெற்று நல்ல முறையில் தொழில் செய்து வருகின்றனர். தற்போது இந்த வியாபாரத்தின் தெபோராள் சுய உதவிக் குழுவினர் மாதந்தோறும் நல்ல வருவாய் பெற்று வருகின்றனர்.

வெற்றி நடை போடுகிறது மண்பானைத் தொழில்

குருவிகுளம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட இராமலிங்காபுரம் ஊராட்சியில் மண்பானை உற்பத்தியாளர்கள் வசித்து வருகின்றனர். இ ர்கள் 13 நபர்களாக இணைந்து தொழில் குழுவாக நவம்பர் மாதம் 2010–ல் தொடங்கினர். இதன் முக்கிய நோக்கம் தங்களுடைய பரம்பரை தொழில் மண்பானை உற்பத்தி தொழிலை நலிவடையாமல் பாதுகாக்கவும், தங்களது தொழிலில் புதிய யுக்திகளைக் கையாண்டு மென்மேலும் விரிவுபடுத்துவதுமே ஆகும். இவர்கள் வங்கிக் கணக்கை தொடங்கி, அவ்வப்போது கூட்டங்கள் போட்டு தங்களது குழுவையும், தொழிலையும் உயர்த்துவதற்கு திட்டமிட்டனர். இதற்காக மாவட்ட ஆட்சித்தலைவரிடமும் மண் எடுப்பதற்கு அனுமதி வேண்டி மனுவும் அளித்தனர். இவர்களது கோரிக்கையை பரிசீலித்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மண் எடுக்க உரிமை வழங்க அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறார். இக்குழுவை உலக வங்கியிலிருந்து சுற்றுச்சூழல் வல்லுநர் திரு. அனுபம் ஜோசி அவர்கள் வருகை தந்து பார்வையிட்டு, ஊக்கத்தையும், சிறப்பாக செயல்பட வழிவகைகளையும் செய்து கொடுத்தார். இவர்களது குழு தற்போது வெற்றி நடைபோட்டு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ■

Published by S.CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY From Tamil Nadu Corporation for Development of Women Ltd, No: 100 Anna Salai, Guindy, Chennai – 600 032 (50,000 Copies circulated) an Printed by V. RAMESH, CHENNAI MICRO PRINT PRIVATE LTD, New 130 Old no.34, Nelson Manickam Road, Aminjikarai, Chennai - 29. Editor: S.CHINNAPPAN.

ஆரோக்கியமான குழந்தை பெற ஆசையா?

நம்பிக்கை மையம் வாருங்கள்!

ஆரோக்கியமான
குழந்தை
நம் பொறுப்பு!

பெற்றோர்-சேய் நலத்திட்டத்தின் மூலம் ஆரோக்கியமான குழந்தையைப் பெற்றெடுங்கள்.

நம்பிக்கை மையம்

- அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள்
- மாவட்டத் தலைமை அரசு மருத்துவமனைகள்
- ஆரம்ப சுகாதார மையங்கள்

ஆகிய இடங்களில் உள்ளன

TANSACS

தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம்,
சென்னை - 600 008.

APAC-VHS

TAI-VHS

RNI No. TNTAM/1999/02733-TAMILNADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS 2435/2010
Reg. No. TN/CC(S)Dn./64/09-11 & Licensed to Post Under without Prepayment No. 564 / 09 - 11

வாக்காளர்களின் பெரும்பங்களிப்பே உறுதியான ஜனநாயகம்!

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் மகளிர் சுய உதவிக் குழுக்களில் உறுப்பினர்களாக உள்ள மகளிர் அனைவரும் தங்களின் ஜனநாயகக் கடமையான வாக்களிப்பை கட்டாயம் செய்திடல் வேண்டும்.

இது குறித்து தமிழ்நாடு முதன்மை தேர்தல் அலுவலர் அவர்களின் கடிதத்தின்படி தமிழ்நாடு மகளிர் திட்டத்தின் கட்டுப்பாட்டில் உள்ள அரசு சாரா தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் மகளிர் திட்ட நேரடிக் கட்டுப்பாட்டில் இல்லாத தன்னார்வ தொண்டு நிறுவனங்களில் உள்ள சுய உதவிக் குழு உறுப்பினர்களிடையே வாக்களிக்கும் முக்கியத்துவம் குறித்தும், வாக்களிப்பது மனசாட்சியின்படியும் இருத்தல் வேண்டும் என்பதற்கான விழிப்புணர்வை மாதாந்திர மாவட்ட திட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் போது அனைத்து தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கிடையே ஏற்படுத்த வேண்டும்.

இத்தகவலை சுய உதவிக் குழு களப்பணிக்கு செல்லும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கிடையே கொண்டு சென்று பெண்கள் சுயமாக வாக்களிப்பது குறித்தும் வாராந்திர கூட்டத்தின்போது விழிப்புணர்வை ஏற்படுத்தி, இது தொடர்பான தீர்மானம் இயற்றவும், மேலும் இது குறித்து சுய உதவிக் குழுக்கள் உறுதிமொழி எடுக்கவும், அந்தத் தீர்மான நகலை தன்னார்வ தொண்டு நிறுவனம் வாரியாக தொகுத்து அதன் அறிக்கையை அரசுக்கு அனுப்ப வேண்டும்.

எனவே மகளிர் திட்டம் மற்றும் மகளிர் திட்டம் அல்லாத தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் அனைத்து சுய உதவிக் குழுக்களிடமும், சுய உதவிக் குழு வாராந்திர கூட்டத்தின்போது வாக்களிக்கும் முக்கியத்துவம் குறித்தும் மனசாட்சியின்படி சுயமாக சிந்தித்து வாக்களிப்பது குறித்தும் விழிப்புணர்வை ஏற்படுத்தி பின்வரும் உறுதிமொழியையும் எடுத்து அதனை தீர்மானம் இயற்றி தீர்மானம் நகலை தன்னார்வ தொண்டு நிறுவனம் வாரியாக தொகுத்து அந்தந்த மாவட்ட மகளிர் திட்ட அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்க அறிவுறுத்தப்படுகிறது.

இயற்றப்பட வேண்டிய தீர்மானம்

‘‘சுய உதவிக் குழு உறுப்பினர்களாகிய நாங்கள் தேர்தலின்போது வாக்களிப்பது எங்களது ஜனநாயகக் கடமை என்றும், நாங்கள் அனைவரும் கட்டாயம் ஓட்டுப் போடுவோம் என்றும், வாக்கினை எங்கள் மனசாட்சியின்படியும் சுயமாக சிந்தித்தும் அளிப்போம் என்றும் உறுதி கூறுகிறோம்’’.

(மாநில தேர்தல் ஆணையத்தின் அனுமதியும், அறிவுரையின்படியும் வெளியிடப்படுகிறது)